
# தமிழரசு

1-4-1976 50 காசு.

# வெற்றியை நோக்கி....!






எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.

தமிழரசு

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

# தமிழ்நாடு அரசின்

## 1976-77-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டச்

# சிறப்பு அம்சங்கள்

✱ தமிழ் நாட்டின் திட்ட முதலீடு 200 கோடி ரூபாய் அளவைத் தாண்டி யுள்ளது.

✱ 1976—'77-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் திட்ட முதலீடாக 201 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது, 1975—'76-ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடாகிய 143 கோடி ரூபாயைவிட 40 சதவிகிதம் கூடுதலாகும்.

✱ இருபது அம்சத் திட்டத்துக்காக 111 கோடி ரூபாய், அதாவது திட்ட முதலீட்டில் 56 சதவிகிதம் செலவிடப்படும்.

✱ மின்சக்தித் துறைக்கான ஒதுக்கீடு 1976—77-ல் 70.18 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. 1975—76-ல் இத்துறைக்கு 41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

✱ தூத்துக்குடி அனல்மின் திட்டத்திற்கு (420 மெகாவாட்) மத்திய அரசின் உதவித் தொகையாக 27 கோடி ரூபாய் முன்பணம் கிடைக்கும்.

✱ பாண்டியாறு—புன்னம்புழா நீர் மின் திட்டத்துக்கு (100 மெகாவாட்) 5 கோடி ரூபாய் கூடுதல் உதவியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

✱ பழைய நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடு 4 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

✱ வறட்சிப் பகுதிகளில் புன்செய் சாகுபடி ஆராய்ச்சிக்கும், நீர்ப்பாசன வசதிகளுக்கும் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்படும்.

✱ அரக்கோணம் எஃகாலை, திருச்சிராப்பள்ளியிலுள்ள மத்திய அரசுத் துறை நிறுவனமாகிய பற்றவைப்பில்லாத குழாய் (சீம்லெஸ் ட்யூப்) உற்பத்தித் திட்டத்தின் துணை அமைப்பாக மாற்றியமைக்கப்படும்.

✱ சென்னை நகரத்துக்குக் குடிநீர் விநியோகிப்பதற்கான கிருஷ்ணா— பெண்ணாறு திட்டத்தின் துவக்க வேலைக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

✱ சென்னை நகரின் சாலை, பாலங்கள் மேம்பாட்டிற்கான திட்டங்களுக்குக் கணிசமான தொகை ஒதுக்கப்படும்.

✱ தொழில் துறை ஊழியர்களுக்கான அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தின் பயன்கள் புதிய துறைகளுக்கும் விரிவாக்கப்படும்; அதன் மூலம், கூடுதலாக 3 இலட்சம் தொழிலாளர் குடும்பங்கள் பயனடையும்.

✱ பழங்குடிப் பிரிவு மக்களின் நல்வாழ்வையும், முன்னேற்றத்தையும் கவனிப்பதற்காகப் புதிதாகப் பழங்குடிப் பிரிவு மேம்பாட்டு நிர்வாகம் அமைக்கப்படும்.

✱ அரிசன மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்குதல், குடிசை மாற்றுத் திட்டம் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகள் உயர்த்தப்பட்டுள்ளன.

✱ பெரு வியாதியைக் கண்டுபிடித்துக் கட்டுப்படுத்துவதற்காக, பள்ளிக்கூடக் குழந்தைகளின் மருத்துவப் பரிசோதனைக்கான புதிய திட்டம் துவக்கப்படும்.

✱ இருபது அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பயிற்சிப் புத்தகங்களுக்கும், பென்சிலுக்கும் 4 சதவிகித பல முனை விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

✱ மாநிலத்துக்கு வெளியே விற்கப்படும் பருத்தி நூல் மீதான விற்பனை வரி, 3 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

✱ உலர் பாட்டரி செல்கள் மீதான விற்பனைவரி 15 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

✱ பயணி மோட்டார் கார்கள் மீதான விற்பனை வரி 15 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைக்கப்படும். இந்த மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பயணி மோட்டார் கார்கள், லேசு ரக டீஸல் வாகனங்கள் ஆகியவற்றுக்கு மத்திய விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.


தமிழரசு

1-4-1976

மலர்-6 இதழ்-19



# நெருக்கடி நிலைமையால் நிறைந்தன நன்மைகள்

கட்டுப்பாடு கடமை உணர்வுடன் நமது குறிக்கோள்களை அடைவோம் என்ற உறுதியுடன் பணி புரிய வாய்ப்பு அளித்துள்ளது நெருக்கடி நிலைமை. அரசு அலுவலகங்களில் அதிக கட்டுப்பாட்டுடன் ஊழியர்கள் தங்கள் கடமை ஆற்றி வருகிறார்கள். அபிவிருத்தி திட்டங்களைச் செயல்படுத்தி முடிக்கும் அலுவல் விரைந்து நடைபெறுகிறது. இதனால் பண்ணைகளிலும், பயிர் நிலங்களிலும், தொழிற்சாலைகளிலும் உற்பத்தி அதிகரிக்கும் என்பதில் ஐயம் இல்லை. நாட்டின் பொருளாதாரம் சிறக்க இது வகை செய்யும்.

மாநிலங்களுக்கிடையேயான எல்லைத் தகராறுகள் போன்ற நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், நாட்டின் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். இதைப் பொது மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஆளுநர்கள் பணியாற்ற வேண்டும்.

**தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்ட காரணம்**

புதிய சவால்களை சமாளிப்பதற்கான அறைகூவலை நாட்டிலுள்ள மாநில அரசுகள் ஏற்றுக் கொண்டபோதிலும், காலத்தின் தேவையை சில மாநிலங்கள் புரிந்து கொள்ளவில்லை. தமிழ் நாட்டில் ஏற்பட்ட அண்மைக் கால நிகழ்ச்சிகள் ஆளுநரின் பணியை வெளிப்படுத்தின. ஒரு மாநில மக்களின் நலனுக்காக பாடுபடுவதற்காக, கண்காணிப்புடன் ஆளுநர் செயல்படாமல், நிகழும் சம்பவங்களைப் பார்த்து கொண்டு வெறுமனே இருந்தால், அவர் தமது கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டதாகக் கருதப்படுவார். ஆளுநர் பதவி வகிப்பவர், மாநில அமைச்சரவையில் தலையீடு செய்யும் முன், மிக அதிக அளவுக்குப் பொறுமையைக் கடைப்பிடிப்பார். தமிழ்நாடு ஆளுநர் தாம் அனுப்பிய அறிக்கையிலிருந்து நீண்ட காலமாக அவர் பெருமளவுக்குப் பொறுமையைக் கடைப்பிடித்தார் என்பதும், மாநில அரசு செயல்படும் விதத்தில் மக்களுக்குச் சாதகமான மாற்றம் ஏற்படலாம் என நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதும் தெரிய வருகின்றன. நிர்வாகத்தில் ஒழுங்கீனம், இலஞ்ச ஊழல் ஆகியவற்றிற்கு மாநில அரசு உணர்ந்தோ உணராமலோ ஆதரவு அளிப்பதாகத் தெரிந்து, அது பற்றி கவனம் செலுத்தி, தக்க நடவடிக்கையை ஆளுநர் மேற்கொள்ளாமல் இருந்தால், அவர் அரசியலமைப்புச் சட்டத்திற்கும், மக்களுக்கும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களிலிருந்து விலகி விட்டதாகக் கருதப்படுவார். நாட்டின் ஒருமைப்பாடு, ஒற்றுமை ஆகியவற்றிற்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தக்கூடிய எந்தச் செயல் குறித்தும் ஆளுநர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய சூழ்நிலைதான், தமிழ்நாட்டில் உருவாகி இருந்தது. ஓரளவுக்குப் பொறுமையைக் கடைப்பிடித்த பிறகே, தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்குச்

சிபாரிசு செய்து ஆளுநர் அறிக்கையொன்றை அனுப்பினர்.

### நெருக்கடி நிலையால் விளைந்த பயன்கள்

நெருக்கடி நிலை அறிவிப்பின் விளைவுகளை நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் தெளிவாகக் காண்கிறோம். பொருளாதாரத் துறையில் இருந்து வந்த குழப்ப நிலை, பாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கான போக்கு ஆகியவற்றிலிருந்து ஒழுங்குக் கட்டுப்பாடு உணர்வைக் கொண்டு வர நெருக்கடி நிலை உதவியது.

### 20 அம்சத் திட்டம்

பிரதமர் அறிவித்த 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் விதத்தில் அமைந்துள்ளது. ஏழைகளைப் பணக்காரர்கள் சுரண்டும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைத்து, நியாயமான பொருளாதார அமைப்புக்கான உறுதியான அடித்தளத்தை அத்திட்டம் அமைத்துக் கொடுத்துள்ளது.

20 அம்சத் திட்டத்தினுல் ஏழைகளுக்கு ஏற்பட வேண்டிய பலன்கள் நேரடியாக அவர்களுக்குக் கிடைக்க வகை செய்ய வேண்டும். சில சிறிய அதிகாரிகள், ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய பலன்களைத் தட்டிப் பறித்துச் செல்லாமல் இருக்க ஆவன செய்ய வேண்டும்.

### உணவு உற்பத்தி பெருகியது!

1975—76 விவசாய ஆண்டில் இரசாயன உரங்கள், பாசன வசதி, நீர், மின் சக்தி




வழங்கல் போன்ற அடிப்படை வசதிகள் பொதுவாகத் திருப்திகரமாகத்தான் இருந்தன. 'கரீஃப்' பருவ காலத்தில் 7 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மொத்தத்தில் உணவு தானிய உற்பத்தி முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. போதுமான அளவுக்குச் சிறந்த பொது விநியோக முறையைப் பராமரிப்பதற்குத் தேவைப்படும் அதிக கையிருப்பு வசதியை ஏற்படுத்திக் கொள்வதற்காக உணவு தானிய கொள்முதல் நடவடிக்கைக்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### நிலச்சீர்திருத்தம்

விவசாய உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று நிலச் சீர்திருத்த அலுவலாகும். இந்த அலுவல் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

### விவசாயிகளுக்குக் கடன் வசதி

நிறுவன ரீதியிலான கடன் வசதி விவசாயிகளுக்கு கிடைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூட்டுறவு முறையில் பண்ணை நடத்துவதை ஊக்குவிக்க வகை செய்ய வேண்டும். பல கிராம பாங்குகளை ஏற்படுத்தி நிறுவன ரீதியிலான பாங்கு வசதியை விரிவுபடுத்தும்போது, கூட்டு நடவடிக்கை மூலம் அதிக அளவுக்குப் பயன்பெற முடியும் என்ற கருத்தை, பொது மக்கள் மனதில் உணர்த்த வேண்டும்.

### பற்றுக்குறை பறந்தது!

அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசியில் நிலையான தன்மை ஏற்பட்டுள்ளது. முன்பிருந்த பற்றுக்குறை, தட்டுப்பாடு நிலைமை மாறி, இப்பொழுது, பண்டங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் பண்டம் நுகர்வோர்—குறிப்பாக ஏழை மக்கள்—கூட்டுறவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையை ஆளுநர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

### வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வழி

தொழில் துறைக்கு மறுமலர்ச்சியும், புத்துணர்ச்சியும் அளிக்கப்போதுமான அக்கறை காட்ட வேண்டும். இது பற்றி வகுக்கப்பட்டு உள்ள கொள்கைகள், உத்திகள் ஆகியவை தனிப்பட்ட தொழில் முனைவோர்களை ஊக்குவித்து இத்தகையோர்க்கு ஆலோசனை சேவை அளிக்கும் வகையில் அமைந்துள்ளன. சிறு தொழில் துறை, தொழிலாளர் முனைப்பானதாகும். இத்துறை வேலையில்லாப் பிரச்னையை—குறிப்பாக கிராமப் புறங்களிலும் பின்தங்கிய பகுதிகளிலும் வேலையில்லாப் பிரச்னையை—சமாளிக்க உதவும்.

### மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைப்போம்!

வேலையில்லாப் பிரச்சினையைச் சமாளிக்கும் போது, மக்கள் தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்தத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஐந்தாவது திட்ட கால இறுதிக்குள் 1,000 பேருக்கு 35 என்ற பிறப்பு விகிதத்தை 1,000 பேருக்கு 30 என்ற பிறப்பு விகிதமாகக் குறைக்க வேண்டும் என்பது தான் நமது முயற்சியாக இருக்க வேண்டும். இதில் ஆளுநர்களும், அவர்களுடைய மனைவியரும் அக்கறை காட்டி, அரசு வகுக்கும் திட்டங்கள், முழு மனதுடன் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும்.

**—புது டில்லியில் 19—3—'76 அன்று நடைபெற்ற ஆளுநர்கள் மாநாட்டில் இந்தியக் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரை.**



# ஒழுங்குமுறை கட்டுப்பாடுள்ள ஜனநாயகம்!

## பிரதமரின் பேருரை

நண்பர்களே!

இன்று அறிஞர்களாகிய உங்களுடன் பேசும் வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்கின்றேன். ஆனால் நான் கல்விமானோ அன்றித் தத்துவ ஞானியோ அல்ல. சிரமப்பட்டே கடினமான பாதை வழியே வந்து சிரமங்களை அறிந்த ஒருத்திதான் நான். தற்காலத்தில் எந்த ஒரு நவீன சமுதாயத்திலும் கூடுமான வரையில் பெருந்தொகையினர் பங்குகொள்ளாமல் அரசியல் நடைமுறைகளை முடிவு செய்ய முடியாது. க்டந்த கால நீண்ட வரலாறும் இதையே உறுதிப்படுத்துகிறது. அதனால்தான் ஒவ்வொரு நாடும்,ஜனநாயகத்


தில் வேட்கை கொண்டுள்ளது. ஆனால் ஜனநாயகம் என்பது ஒரே நிலையிலுள்ள ஒரு கருத்தல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏதென்ஸ் நாட்டில் முழுமையுற்றதாகக் கண்ட ஜனநாயகத்தில் தாய்மார்களும் அடிமைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். அதனால் அது இன்றைய நிலையில் முழுமையுள்ளதாக ஆகாது. எனவே ஜனநாயகக் கொள்கை உலக முழுவதிலும் மாறி வர வேண்டிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

ஜனநாயகத்தின் அடிப்படைத் தன்மை என்னவென்றால் அதில் மக்களின் கருத்துக்கள் நன்கு பிரதிபலிக்க வேண்டும். மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அமைதியாக நிர்வகிக்கவும் முடிய வேண்டும். ஆளப்படுவோரின் இசைவு உள்ளதாகக் கருதிக் கொள்ளக்கூடாது. மாறாக அவர்களின் இசைவு இருந்தாக வேண்டும். அரசின் அன்றாட நடவடிக்கைகளின் ஆதாயங்கள் ஒரு சிலருக்கு அல்லாமல் பெருத்த பெரும்பான்மையான மக்களுக்கே கிடைக்க வேண்டும். ஜனநாயகம் என்றாலே அங்கே பலாத்காரங்களுக்கு இடமில்லை என்று பொருள். அகிம்சையை ஏற்காமல், வரம்பற்ற பேச்சு, கலவரங்கள் ஆகியவற்றை விலக்காமல் நடந்தால் அங்கே ஜனநாயகத்துக்கு இடமில்லை. ஜனநாயகம் நம் வாழ்வின் ஒவ்வொரு படியிலும் தேவைப்படுகிறது. ஜனநாயகம் என்பது என்ன, என்ற கேள்வி எழுகின்றது.

உண்மையில் அது சீருடை பூண்டதோ அன்றி இராணுவ உடை அணிவதோ அல்ல. நமது சொந்த விருப்புகளை உயர்ந்த விருப்புக்களுக்கும் தனிப்பட்ட விருப்புக்களைச் சமுதாய விருப்புக்களுக்கும் விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதை உணர்வது ஜனநாயகம். அது உரிமைகளை விடக் கடமைகள் உயர்ந்தவை என்று உணர்வது, தன்னலத்தைப் பிறர் நலத்துக்கு விட்டுக் கொடுப்பது அது பிறருக்காகவும் பிறருடனும் உழைக்கும் திறன். தன் தனிப்பட்ட ஒருமித்த திறன்களை வளர்க்கத் தொடர்ந்து செய்யும் முயற்சி எல்லாவற்றிருக்கும் மேலாக கோபம், வெறுப்பு, பலாத்காரம் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதே அது. யாரும் தனது கற்பனையிலான உரிமைகளை அடைவதற்காகப் பலாத்காரத்தை நாடக்கூடாது.

அரசியல் துறையில் ஜனநாயகம் என்பது சிறு கும்பல்கள் பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது தேவைகளைச் சாதித்துக் கொள்வதும் சமுதாயத்தையே சீரழிக்கச் செய்வதும் அல்ல, தேசீய சொத்துக்களை மிகவும் மதிப்பதே ஆகும். சமயம் மற்றும் மொழியிலும் சிறுபான்மையோராக இருப்பவர்களையும் பாதுகாக்கப் பெரும்பான்மையானவர்கள் கருதுவதேயாகும். தேசிய ஒழுங்குக் கட்டுப்பாட்டில் மதச்சார்பின்மைதான் முதல்படி ஆகும். சட்டமன்றத்தின் பெரும்பான்மையினர் சரியான குற்றச் சாட்டுக்களுக்குச் செவி சாய்க்க வேண்டும். எதிர்க்கட்சியினர், குறைவானவர்களோ அன்றி அதிகமானவர்களோ, அவர்கள் குரல் கொடுக்கத் தடையிருக்கக்கூடாது. ஆனாலும் சட்டமன்ற நடவடிக்கைகளுக்கே குறுக்கீடு வருவதை அனுமதிக்க முடியுமா?




நிர்வாகத்தில் ஜனநாயகம் என்பது செயலில் மிகுந்த வேகமும், மனிதாபிமானமும் என்பதாகும். ஒருவர் தம் கடமையைச் செய்வதும் ஏதோ ஒரு சலுகை காட்டி விட்டதாகக் கருதுகிற ஏகாதிபத்திய முறையை அறவே ஒழிப்பதும் ஆகும்.





நீதித்துறையில் ஜனநாயகம் என்பது எளியோர்க்கு விரைவாக நீதி கிடைக்கச் செய்வதும், தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தைக் காப்பதுடன் சமுதாயத்தின் உரிமைகளை நிலை நிறுத்தவும் வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் உறுதி கொள்வதும் ஆகும்.





புராதன காலத்தில் ஜனநாயகம் என்பது அரசியல் ஜனநாயகந்தான். அதுவும் சுமாராகச் சொல்ல வேண்டுமானால் ஒவ்வொருவரும் ஒரு ஓட்டைப் பெறும் கருத்தாகத்தான் இருந்தது என்று என் தந்தை குறிப்பிடுவார். மிகத்தாழ்ந்த நிலையிலுள்ள ஒருவனுக்கு வாக்குரிமை என்பதானால் எந்தப் பயனும் இல்லை என்பது தெளிவு. அத்தகைய ஒருவன் வாக்களிப்பதை விட உணவு சாப்பிடவே மிகவும் விரும்புவான். ஆகவே அரசியல் ஜனநாயகம் என்பதாலேயே எந்தப் பயனும் இல்லை. ஆனால் அதனால் படிப்படியாக அதிகமான பொருளாதார ஜனநாயகத்தைஅடையலாம் என்பதால்தான் பயனுள்ளது. வாழ்வில் நல்லவைகள் மேலும் மேலும் அதிகப்படியான மக்களுக்குக் கிடைக்க வேண்டும். பெருத்த ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும்.



பொருளாதாரத் துறையில் சுதந்திரம் என்பது தயாரிப்பாளர்கள் பொருள் நுகர்வோரை ஏமாற்றாமலும், தொழிலதிபர்கள் தொழிலாளரைச் சித்திரவதை செய்யாமலும் தொழிலாளர்கள் உற்பத்தியைப் பாதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலும் இருப்பதேயாகும்.



கல்வித்துறையில் சுதந்திரம் என்பது மாணவர்கள் கல்வியில் ஈடுபடுவதும், ஆசிரியர்கள் தமது கல்வியறிவை ஆழப்படுத்திக் கொண்டு மாணவர்களின் நோக்கத்தை விரிவாக்குவதும் ஆகும். மாணவர்கள் ஒளிச் சுடரைத் தாங்குவோர் என்ற வகையில் இனி புரட்சிகரமான, அதிதீவிரவாதச் சக்திகட்கு ஆட்படாமல் இருக்க வேண்டும்.

இளைஞர்கள் தமது நேரத்தில் ஒரு

பகுதியைப் பரந்த சமுதாயத்தின் ஆக்கபூர்வ பணிகளுக்காகவும், சமூக நலப்பணிகள் மூலம் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கவும் தயாரிப்பை அதிகரிக்கவும் பயன்படுத்த வேண்டும்.

இவையாவும்தான் நமது ஜனநாயகத்தை இன்னும் அர்த்தமுள்ளதாகவும் குறிக்கோள் உயர்ந்ததாகவும் ஆக்கும். ஆனால் நாம் இதில் யாரையும் காப்பியடிக்கத் தேவையில்லை. ஜனநாயகம் என்பது வெளிநாட்டு அறிவாளிகள் கருதுவதல்ல. முன்னேற்றம் என்பதும் அவ்வாறு இல்லை. நமது சொந்த ஜனநாயகத்தையும் நமது சொந்த முன்னேற்ற வடிவத்தையும் உருவாக்க வேண்டும். ஜனநாயகத்தில் தனிவுரிமையுடன் தேசிய உருவாக்கமும் வேண்டும் என்றே என் தந்தையும் விரும்பினார். சுய நலமும் கட்டுப்பாடின்மையுமே வளர்ந்தன. சட்டமன்ற அமைப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவிட்டோம். நாட்டை உருவாக்குவதில் போதிய கருத்தைச் செலுத்தவில்லை. அதைச் சரிப்படுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. கட்டவிழ்த்து விடப்பட்ட எல்லாப் பிரச்சாரத்துக்கும் மாறாக ஜனநாயகத்தை இந்தியா கைவிடவில்லை. அது கைவிடப்போவதும் இல்லை. ஏக கட்சி ஆட்சி முறையும் ஏற்படாது. நமது நாடு சக்தி வாய்ந்ததாக மக்களை ஒன்றுபடுத்துவதாக அவர்கள் வேலை செய்யும் சூழலை உருவாக்குவதாக இருக்க வேண்டும். எந்த நெறிமுறை வந்தாலும் குறைபாடுகள் இருக்கும். முன்கூட்டியே யாவற்றையும் கணிக்க முடியாது. புதிய புதிய சிக்கல்கள் வந்தே தீரும்.





அப்படிக் கணிக்க முடிந்திருந்தால் நமது அரசியல் அமைப்பை உருவாக்கியவர்கள் அதற்கேற்பச் செய்திருப்பார்கள்.

நமது நெறிமுறை நடைமுறைக்கு உகந்ததுதான். செயல்பட முடியவில்லை என்றால் அது நமது தவறே ஆகும். உதாரணத்திற்கு விஞ்ஞானம் நல்லதுதான். ஆனால் அதையே அழிவுக்குப் பயன்படுத்துவோரும் உள்ளனர். நமது நட்புறவை நமது பலவீனம் என்று கருதுவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். தேசிய நலத்தைப் பொறுத்தவரை நாம் பலவீனமானவர்களில்லை என்பதை நிரூபிக்கும் காலம் வந்துவிட்டது. நம்நாடு மிகப்பெரிய நாடாகையால் பல வேறுபட்ட மக்களாக இருக்கிறோம். இவர்கள் அனைவருக்கும் இடம் இருக்குமாறுதான் நம் அரசும் தேர்தல்களும் அமைய வேண்டும். மக்கள் ஆதரவற்ற எந்த அரசும் நெடுநாளைக்கு நீடித்திருக்க முடியாது என்பதை உணர வேண்டும்.

நாம் மக்களின் நன்மைக்காகவே முழு மனத்துடன்—அவர்களின் நன்மைக்காகவே பாடுபடுகிறோம் என்று மக்கள் உணரும் வரையில் தான் மக்களும் நம்முடன் இருப்பார்கள். ஜனநாயகமா அல்லவா என்பதற்கான அடிப்படையும் இது தான்.

**[தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் கடந்த 22-2-76 அன்று பம்பாயில் ஒழுங்குமுறை கட்டுப்பாடுள்ள ஜனநாயகம் என்ற தலைப்பில் ஆற்றிய உரையிலிருந்து].**

## சேலம் எஃகுத் தொழிற்சாலையின் வளர்ச்சி

சேலம் எஃகு ஆலைத் திட்டம் சம்பந்தமாக 'தஸ்தூர் அண்டு கம்பெனி'யிலிருந்துவந்த விரிவானதிட்ட அறிக்கையை மத்திய அரசு தற்போது பரிசீலித்து வருகிறது.

இத்தொழில் திட்டத்திற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும் அலுவல் கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது. மொத்தம் 1,536 எக்டேர் நிலம் தேவைப்படுகிறது. இதில் 1,534 எக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. 1,532 எக்டேர் நிலத்தைச் சேலம் எஃகு நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

சேலம் நகரிலிருந்து இத்திட்டப் பகுதிக்குச் செல்வதற்கான சாலை, விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ரயில்வே யார்டு ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. மின் விநியோக அமைப்புகள் ஏற்படுத்தும் அலுவல் கிட்டத்தட்ட முடிவடைந்துவிட்டன. நீர் வழங்குவதற்கான கட்டுமானப் பணி முன்னேறிவருகிறது. கடைக்கால் அமைக்கும் பணியில் 75 சதவிகிதம் முடிவடைந்துவிட்டது. சுற்றுப்புற எல்லைச்சுவர், திட்ட அலுவலகக் கட்டிடம், ரயில் பாதைக்குக் குறுக்கே மேம்பாலம், தொழிற்சாலைக்குச் செல்வதற்கான சாலை அமைப்பு, மின் சக்தி வழங்குவதற்கான அமைப்பு, நீர்வசதிக்கான அமைப்புப் போன்றவை முடியும் தறுவாயில் உள்ளன. இத்தொழிற்சாலைப் பகுதியில் ரயில் பாதை அமைப்புப் பணி முடிவடைந்து விட்டது.

சாதனச்சேமிப்புக்கிடங்குகள், குடிநீர்த் தொட்டி, குடிநீராக மாற்றுவதற்கான இயந்திரங்கள் கொண்ட பிரிவு, இயந்திரப் பொறியியல், மின்பொறியியல் சாதனங்களைப் பழுது பார்க்கும் பட்டறை, மத்திய கிடங்குப் பகுதி, கண்காணிப்புக் கூண்டுகள் ஆகியவற்றை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்தொழிற்சாலையின் முதல் கட்டத்திற்கான பெரிய மற்றும் துணை இயந்திரங்களுக்குத் தேவைப்படும் இயந்திரங்கள், மின் சாதனங்கள் ஆகியவை பொறியியல் ஆலோசனை நிறுவனங்களிடமிருந்து வந்து சேர்ந்துள்ளன.

# இரு மொழிக் கொள்கையில் மாறுதல் இல்லை!



"தமிழ் நாட்டில் தமிழே பயிற்றுமொழி என்கிற அடிப்படைக் கொள்கையிலோ, அல்லது முந்தைய அரசு வகுத்த (தமிழ் ஆங்கிலம் இரண்டும் தேவை) இரு மொழிக் கொள்கையிலோ எவ்வித மாற்றமும் கிடையாது; மாற்றம் செய்யும் உத்தேசமும் இல்லை.

''அதே நேரத்தில் இந்தி போன்ற வேறு மொழி படிக்க முன்வருபவர்களுக்குத் தேவையான வசதி செய்து கொடுக்கப்படும். ஆனால், அந்த மொழிப் படிப்பு பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்டதாகத் தனியே கற்றுத் தரப்படும். விரும்பிப் படிக்க முன்வருபவர்கள் வசதிக்காகவே இந்த ஏற்பாடு'' என்று மேதகு தமிழ் நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் 17—3—'76 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களிடம் கூறினார். மேலும் அவர் கூறியதாவது :



## பாட நூல்களில் கட்சிச் சாயல் நீக்கப்படும்

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் முன்பே வெளியிடப்பட்ட பாட நூல்களையும் இனி வெளியிடப்படவிருக்கும் பாடநூல்களையும் தணிக்கை செய்ய ஒரு குழு அமைக்கப்படும். இந்த நூல்களில் கட்சிச் சாயல் இருக்கிறதா என்பது பற்றியும் அவற்றை நீக்குவது குறித்தும் அக்குழு ஆராயும்.

பாட நூல்கள் கல்வி அறிவு வளர்ச்சியை முக்கியமாகக் கொண்டதாக இருக்க வேண்டுமே தவிர, எந்த ஒரு கட்சிச் சாயல் அல்லது சார்பு கொண்ட கருத்துக்களுக்குப் பாடப் புத்தகங்களில் இடமிருத்தலாகாது. அவ்வாறு இருக்குமேயானால் அது கல்வி நலனுக்கு உகந்தது ஆகாது. எனவே, அவ்வாறான பகுதிகள் அகற்றப்பட வேண்டியவையே. ஏற்கெனவே வெளிவந்துள்ள புத்தகங்களாயினும், இனி வெளிவர இருப்பவைகளாயினும், அப்புத்தகங்கள் இக்குழுவினரால் பரிசீலிக்கப்படும்.

இதன் காரணமாக, வருகிற கல்வியாண்டில் பாடப் புத்தகங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமலிருப்பது முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்படும்.

## அரசு ஊழியர்கள் கட்சிச் சார்பற்றவர்களாக இருக்க வேண்டும்!

குறிப்பிட்ட துறையில் எந்த அதிகாரி அல்லது அரசு அலுவலாளர் கட்சிச் சார்புடன் நடந்து கொண்டார் என்று குறிப்பான ஆதாரங்களுடன் தகவல் தந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்.

அதிகாரிகளும் அரசு அலுவலாளர்களும் அரசியல் கட்சிச் சார்புடையவர்களாக நடந்து கொள்வது குற்றமாகும். அரசியல் கட்சிச் சார்புடையவர்களுடன் அதிகாரிகள்தொடர்பு கொள்வது பொது நிர்வாக நலனுக்குக் குந்தகம் விளைவிப்பதாகும். அரசுப் பணியில் இருக்கும்போது அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்வது குற்றம் என நான் கருதுகிறேன். அப்படி எவரேனும் வைத்திருப்பதாகக் குறிப்பிட்ட புகார் வருமானால் அதன்மீது உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

## என். ஜி. ஓ. யூனியன்

தமிழ் நாடு என். ஜி. ஓ. யூனியனில் இரண்டு கோஷ்டிகள் செயல்படுவது பற்றி நான் அறிந்திருக்கிறேன். அது குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

## புதிய கல்வி முறை

பத்தாண்டுப் பள்ளிப் படிப்பு—இரண்டு ஆண்டு ஹையர் செகண்டரி கல்வி, மூன்று ஆண்டு பட்டப் படிப்பு என்ற புதிய கல்வி முறை 1978-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் அமலுக்கு வரும்.

1978-ஆம் ஆண்டில் இரண்டாண்டு ஹையர் செகண்டரி படிப்பில் சேரும் மாணவ-மாணவியர் முதல் அணியினர் 1980-ஆம் ஆண்டில் தேர்வெழுதி மூன்றாண்டுப் பட்டப் படிப்பில் சேருவர்.

எந்தக் குடிமகனும் தான் விரும்பிப் படிக்க முன்வரும் மொழியைக் கற்றுத் தர தடை இருக்கக் கூடாது.

## இலவசக் கல்வி!

இலவசக் கல்வி வசதி காரணமாகக் கல்வியின் தரம் எப்படியிருக்கிறது என்ற பிரச்னையின் முழுத் தன்மை குறித்தும் மறுஆய்வு தேவை என்பது என் கருத்து.

## விலையேற்றத்தைத் தடுப்போம்!

கடலை எண்ணெய், மிளகாய் போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஏறிவருவதாகக் கூறப்படுகிறது. அப்படி விலை ஏற முகாந்திரமில்லை. ஏறி வருமானால்அதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கஅதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அடுத்த இரண்டு மாதங்களில் 600 ஆழ் குழாய்க்கிணறுகள் வெட்டத்திட்டமிடப்பட்டுள்ளது.







## ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகள்

சென்னை மாநகரில் ஆங்கிலப் பயிற்று மொழி ஆரம்பப் பள்ளிகள் அங்கீகாரம் பெருமல் அளவுக்கு மீறிப் பெருகி வருவது பற்றியும், இவற்றைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தும் உத்தேசம் உண்டா என்றும் கேட்கப்படுகிறது.

ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்க விரும்புகிறவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய,முறையான பள்ளிகளில் கூடுதலான ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகள் திறக்க ஏற்பாடு செய்வதன் மூலம் இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். கூடுதல் வகுப்பு துவக்கத் தேவையான அளவுக்கு மாணவர்கள் முன்வரும் பள்ளிகளில் இருந்து கூடுதல் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகள் துவங்கக் கோரி அரசுக்குக் கோரிக்கை வருமானால், அது அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும்.



# வேளாண்மை வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு



வேளாண்மையையே முக்கிய தொழிலாகக் கொண்ட மக்கள் பெரும் பான்மையாக வாழும் இந்தியாவில் இன்று விவசாயத் தொழிலுக்கும், விவசாயப் பட்டதாரிகளுக்கும் அதிகமான மதிப்புத் தரப்படவில்லை. அந்த நிலை மாறி, இளைஞர்களெல்லாம் விவசாயத் தொழிலில் நாட்டங் கொண்டால்தான் நாம் பற்றாக் குறைகளை முறியடித்து வெல்ல முடியும்.

உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயம்தான் முதல் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. விவசாயமும் விவசாய உற்பத்திப் பொருள்களும் பெருகாவிடில் விவசாய உற்பத்திகளை நம்பி வாழும் உயிரினங்களும், தொழில் துறைகளுங்கூடப் பெரிதும் நசிந்து போகும். உலகப் பொருளாதாரம் வளர வேண்டுமென்றால் உலக விவசாய உற்பத்தி பெருக வேண்டும். இந்த உண்மையை அண்மைக்காலமாகத் திட்ட நிபுணர்கள் யாவரும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

விவசாயம் வட்டச் சுழற்சி முறையை ஆதாரமாகக் கொண்டு உற்பத்தியளிக்கும் ஒன்றாக இருப்பதால், அது எந்த நாட்டுக்கும் ஆதார வளமாகவும் பெரிய இலாபம் தரத் தக்க சொத்துப் போன்றும் இருக்கிறது.

பெட்ரோல் முதலிய எரிபொருள்கள் நாட்டிற்குப் பெரிய இலாபம் தரும் சிறந்த வளங்களில் ஒன்றாக இன்று கருதப்பட்டாலும் அது மண்ணிலிருந்து கிடைக்கும் வரையில் தான் எந்த நாடும் அதன் மூலம் பொருளீட்ட முடியும். மண்ணில் வற்றாத ஊற்றாகவோ திரும்பத் திரும்பக் கிடைத்துக் கொண்டேயிருக்கக் கூடியதாகவோ பெட்ரோல் இல்லை. அதனால் சுழற்சி முறையில் மீண்டும் மீண்டும் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ள உதவும் ஆதார வளமாக உள்ள விவசாயத்திற்கு அது ஒரு நாளும் இணையாக முடியாது. அப்படிப்பட்ட விவசாயத் தொழிலில் எல்லோரும்—சிறப்பாக இளைஞர்கள்—பெரிதும் ஆர்வம் காட்ட வேண்டும்.



வேளாண்மைக் கல்வி கற்க நிறைய இளைஞர்கள் முன்வர வேண்டும். ஒவ்வொரு விவசாயியும், விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தொழிலாளியும் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களைத் தங்கள் நல்வாழ்வுக்கு உதவும் கலைக் கோயில்களாக மதிக்க வேண்டும். இதனை நடைமுறையில் நிகழச் செய்வதற்கு விவசாயப் பட்டதாரிகள் கடினமாக உழைக்க வேண்டும்.

தகுதி என்பது கேட்டுப் பெறும் ஒன்றல்ல என்பதையும் பரந்த அறிவினாலும், கடினமான உழைப்பாலும் தேடிப் பெற வேண்டிய ஒன்றே அது என்பதையும் ஒவ்வொரு விவசாய மாணவரும் உணர்ந்து நடக்க வேண்டும்.

**—டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்,**
**இந்திய வேளாண்மைக் கழகத் தலைவர்,**
**—[ஹரிங்கட்டா விதான் சந்திரா வேளாண்மைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா உரையில்].**



# தமிழ்நாடு அரசின் 1976-77 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்

**1976ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 19ஆம் நாளன்று மத்திய நிதி அமைச்சர் அவர்களால் மக்கள் சபையில் வைக்கப்பட்ட விவர அறிக்கை.**

தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் 1976–77ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கின்றேன்.

தமிழ்நாட்டில் 1976ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31ஆம் நாள் அன்று, குடியரசுத் தலைவர் ஆட்சி எந்தச் சூழ்நிலையில் கொண்டுவரப்பட்டது என்பதை

இம்மன்றத்தினர் அறிவர். அதன் பின் நமக்குக் கிட்டிய குறுகிய கால வாய்ப்பில், தமிழ்நாட்டின் தேவைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப் பணிகள் பற்றியும் ஆழ்ந்து ஆய்ந்துள்ளோம். முதலாவது, இரண்டாவது, மூன்றாவது திட்ட காலங்களிலே அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு முன்னணியில் நின்றதெனினும், கடந்த சில ஆண்டுகளாக, வளர்ச்சிப் பணிகளின் செலவுகளை எடுத்துக்கொண்டாலும் சரி, திட்டமிடுவதில் எந்தெந்தத் துறைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்கொண்டாலும் சரி, தமிழ்நாடு பின்தங்கிவிட்டது. இந்த நிலைமையில், தேசிய வளர்ச்சியில் தமிழ்நாடு மீண்டும் தனது உரிய பங்கைப் பெறும் வகையில், 1976—77 ஆம் ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டைக் கணிசமான அளவுக்கு உயர்த்த வேண்டியது நமது தலையாய பணியாகும். அவ்வாறு திட்ட நிதி அளவினை உயர்த்தும்போது, வேளாண்மை, பாசனம், மின்சக்தி, தொழில்கள், போக்குவரத்து முதலிய அடிப்படைத் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது அவசியம்; அதே நேரத்தில் சமூக நலப் பணிகளுக்கும் உரிய அளவில் நிதி ஒதுக்குவது தேவை; திட்ட நிதி ஒதுக்கீட்டினை உயர்த்தும் இந்த முயற்சி, மாநிலத்தின் நிதி ஆதாரங்களைப் பாதுகாத்து, நிதி வசதிகளைத் திரட்டுவதன் அடிப்படையிலேயே அமையவேண்டும். இந்த வரவு-செலவுத் திட்ட வாயிலாக நாம் அடைய முற்பட்டுள்ள முக்கியமான குறிக்கோள்கள் இவையே ஆகும்.

**1976-77 ஆம் ஆண்டுத் திட்டம்**

முன்பிருந்த மாநில அரசுடன் நடந்த பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில், தமிழ்நாட்டின் 1976—77 ஆம் ஆண்டுத் திட்டத்துக்கு 177 கோடி ரூபாய் அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நிதி வசதிகளைக் கவனமுடனும் தக்க கட்டுப்பாட்டுடனும் பயன்படுத்துவதன் மூலம் இந்த ஒதுக்கீட்டினை 201 கோடி ரூபாயாக உயர்த்த இயலும்; அது அவசியமானது என்றும் தற்போது கருதியுள்ளோம். திட்டத்தின் அளவில் செய்யப்படும் இந்த 24 கோடி ரூபாய் உயர்வு, வேளாண்மை, பாசனம் (6·77 கோடி ரூபாய்), மின்சக்தி (5 கோடி ரூபாய்), தொழில்கள் (1·05 கோடி ரூபாய்), குடிநீர் வழங்கல் (2·14 கோடி ரூபாய்), குடிசைப் பகுதி மாற்றுதல் (1·14 கோடி ரூபாய்), அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் நலன் (1·44 கோடி ரூபாய்) ஆகிய துறைகளுக்கு பெரும்பாலும் பயன்படுத்தப்படும். அடுத்த ஆண்டுக்கான 201 கோடி ரூபாய் திட்டம், நடப்பாண்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 143 கோடி ரூபாயுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கணிசமான அளவில், அதாவது 40 சதவீதம் உயர்ந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தில் 111 கோடி ரூபாய், அதாவது, மொத்த ஒதுக்கீட்டில் 56 சதவீதம், இருபதம்சத் திட்டத்துடன் தொடர்புள்ள பணிகளுக்காகச் செலவிடப்படும். நடப்பு ஆண்டில் மின்சக்தித் துறைக்கு 41 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்க, வரும் ஆண்டில் இத்தொகையை 70·18 கோடி ரூபாயாக உயர்த்தி, பல ஆண்டுகளுக்குப் பிறகு மின்சக்தித் துறைக்கு மீண்டும் முதலிடம் அளித்துள்ளோம்.

**வேளாண்மை உற்பத்தி**

நல்ல பருவநிலை மீண்டும் ஏற்பட்டதால் தமிழ்நாட்டில் வேளாண்மை உற்பத்தி பெருமளவில் உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் உணவுதானிய உற்பத்தி 80·6 இலட்சம் டன் அளவில் இருக்குமென்றும், 1976—77 ஆம் ஆண்டில் 83 இலட்சம் டன்னாக உயருமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இரசாயன உரம் போதிய அளவு கையிருப்பில் உள்ளது. விதைப்




பண்ணைகளை வலுப்படுத்தவும், தக்க தரிசு நிலங்களை மாநிலப் பண்ணை நிறுவனத்தின் மூலம் விளை நிலமாக்கவும் முதலீடுகள் செய்யப்படும். வேளாண்மை யுடன் தொடர்புள்ள கால்நடை வளர்ப்பு, மீனளம், காடுகள் ஆகிய துறைகளுக்கும் ஆண்டுத் திட்டத்தில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

**பாசனம்**

1976–77ஆம் ஆண்டில், 12·64 கோடி ரூபாய்ச் செலவில், மருதாநதி, குடகனாறு, வட்டமலைக்கரை ஓடை, பாலாறு-பொருந்தலாறு ஆகிய நான்கு பாசனத் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படும். இதன் மூலம் 17,230 ஏக்கர் பரப்பளவு புதிதாகப் பாசனம் பெறுவதோடு, 13,100 ஏக்கரில் பாசன வசதிகள் பெருகி உறுதிப் படுத்தப்படும். வைகைக் கால்வாயைப் புதுமைப்படுத்தும் வேலை கணிசமான அளவு நிறை வெய்தும். பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்திற்காக உலக வங்கியிடம் உதவி கேட்டுள்ளோம். தமிழ்நாட்டில் மேற்பரப்பு நீர்வளம் பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டுவிட்டது. நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதிலும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வரையறைகள் ஏற்பட்டுள்ளன. பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்து வதில் திறனுக்கும் சிக்கனத்திற்கும் முக்கியத்துவம் அளித்து, மாநிலத்தின் நீர்வளம் அனைத்தையும் தக்க முறையில் ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதற்காக ஆய்ந்து, திட்டமிட்டு, செயல்பட வேண்டியது அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, பழைய பாசன அமைப்புகளைச் சீர்படுத்துவதற்காக வரும் ஆண்டுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப் பள்ளி, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 24 பகுதிகளை, பாசன ஆணைக் குழு (Irrigation Commission) குறிப்பிட்டுக் காட்டியுள்ளது. இந்தப் பகுதிகளில் புன்செய்ப் பயிர் விளைச்சலை அதிகரிக்க ஆராய்ச்சிகளும் அவற்றைத் தொடர்ந்து விரிவாக்கப் பணிகள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவையும் விரைவாக மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் வறட்சி யால் பீடிக்கப்படும் மாவட்டங்களுக்கு நிலையான நிவாரணம் அளிக்கும் வகையில் பாசனத் திட்டங்களை உருவாக்கி, நிறைவேற்ற, இயன்ற முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும்,

**மின் சக்தி**

எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 110 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட ஐந்தாவது இயந்திரம் செயல்படத் தொடங்கியுள்ளது. இத்துடன் தமிழ் நாட்டின் மின் உற்பத்தித் திறன் 2,364 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. ஆண்டொன்றுக்கு 69 மில்லியன் கிலோவாட்மணி மின்சாரம் வழங்கக் கூடிய நடுவட்டம் திட்டம் விரைவில் முடிக்கப்படும். பாரத கனரக மின்சார நிறுவனத்தின் உதவியுடன் எண்ணூர் அனல் மின்

நிலையத்தைச் சீர்திருத்தும் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில், குறிப்பாக அனல் மின் நிலையங்களிலிருந்து, மின் உற்பத்தியைப் பெருக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். தென்மேற்குப் பருவ மழை நல்ல முறையில் அமைந்தால், கேரளத்திலிருந்து கிடைக்கும் மின்சக்தியின் உதவியுடன் ஆண்டு முழுவதும் மின்சார வெட்டினைத் தவிர்க்க முடியுமென்று நம்புகிறோம்.

தூத்துக்குடி மின் திட்டத்தின் முதல் நிலைக்கு, வரும் ஆண்டுத் திட்டத்தில், 34·5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 1979—80ஆம் ஆண்டில் 420 மெகாவாட் மின் சக்தி கூடுதலாகக் கிடைக்கும். தமிழ்நாட்டின் மின் சக்தி வளர்ச்சிக்கு நாம் மிகச் சிறப்பிடம் அளித்திருப்பதைக் கருத்திற்கொண்டு, இத் திட்டத்திற்காக மத்திய அரசு, திட்ட முன் உதவியாக 27 கோடி ரூபாய் வழங்க முன்வந்துள்ளது. பாண்டியாறு-புன்னப்புழா புனல் மின் திட்டத்திற்கு (100 மெகாவாட்) 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொழில் துறை**


கூட்டுத் துறைத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி வரும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (TIDCO) ஆண்டுத் திட்டத்தில் 4·21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரியலூரில் 16·5 கோடி ரூபாய் செலவில் பொதுத் துறையில் சிமிட்டி ஆலை ஒன்றைப் புதிதாக அமைக்கும் பணியையும் இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் பற்றவைப்பில்லாத குழாய்த் தொழிற்சாலையை (Seamless Tube Project) நிறுவ மத்திய அரசு அண்மையில் முடிவு எடுத்துள்ளது. அரக்கோணத்திலுள்ள தொடர் வார்ப்பாலையில் (Continuous Casting Plant) அதற்கு வேண்டிய இரும்புப் பாளங்களை உற்பத்தி செய்து வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**ஏனைய திட்டங்கள்**

வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ள ஏனைய முக்கியத் திட்டங்களைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பள்ளி, கல்லூரி, தொழில்நுட்பக் கல்வித் துறைகளில் தரத்தை மேம்படுத்துவதற்கும், மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்துவதற்கும் தொடர்ந்து சிறப்பிடம் அளிக்கப்படும். வருகின்ற நிதியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள 375 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும், வழக்கில் இருக்கும் முறைக்கு அப்பாற்பட்ட புதிய முறைக் கல்வி (Non-formal education) நிலையங்களைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம்.

மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தவும், அரசினர் மருத்துவ மனைகளில் அளிக்கப்படும் வசதிகளின் தரத்தை




உயர்த்தவும், கூடுதலாக மருத்துவ அதிகாரிகள், செவிலியர், மருந்தாக்குவோர் ஆகியோரை நியமிக்கவும், இந்திய முறை மருத்துவத்தை ஊக்குவிக்கவும், சுகாதாரம்-மருத்துவத் துறையின் கீழ் போதிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்டத்திற்கென 6·3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் செயல்முறைகளை ஆய்ந்து, விரிவுபடுத்தவும், விரைவு படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தொழுநோய் பெருமளவில் பரவியுள்ள செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் தொழுநோயைத் தடுத்தல், தொடக்க நிலையிலேயே கண்டறிதல், கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு, பள்ளிச் சிறார்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்படும்.

பதிவுபெற்ற தொழிற்சாலைகள் அனைத்திற்கும் பொருந்தும் வகையிலும், வணிக நிறுவனங்கள், உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள், கடைகள், திரை அரங்குகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றிற்குப் பொருந்தும் வகையிலும், தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் விரிவுபடுத்தப்படும். இது வரை இத் திட்டத்தின்கீழ் வராத மூன்று இலட்சம் தொழிலாளர் குடும்பங்கள் இதன் மூலம் நன்மை பெறுவர்.

வருகின்ற ஆண்டுத் திட்டத்தில் அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கென 17·45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இருபதம்சத் திட்டத்தின் ஒரு முக்கிய இனம், அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதாகும். இதற்காக நடப்பாண்டில் 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது; இது, வரும் ஆண்டில், 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். தமிழ் நாட்டிலுள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்தவும், அவர்களைத் துன்புறுத்தும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், இதுவரை ஒருங்கிணைந்த நிலையில் வழிவகை செய்யப்படவில்லை. இவர்களின் நலனுக்கென திட்டங்கள் வகுத்துச் செயற்படுத்த, பழங்குடி மக்கள் முன்னேற்ற மன்றம் (Tribal Development Authority) ஒன்றைப் போதுமான நிதி வசதிகளுடனும் உரிமைகளுடனும் ஏற்படுத்துவதென முடிவு செய்துள்ளோம்.



மொத்தம் 3·6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு, குடிசைப் பகுதி மாற்று திட்டம் செயற்படுத்தப்படும். சென்னை மாநகரில் பக்கிங்ஹாம் கால்வாய் நெடுக உள்ள குடிசைப் பகுதிகளை படிப்படியாக அகற்றும் திட்டத்திற்காக, ஆண்டுத் திட்டத்தில் 60 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புறச் சுகாதார மேம்பாட்டுப் பணிகளுக்காக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சாலை அமைப்பு-பராமரிப்புப் பணிகளுக்கென மொத்தம் 30.21 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். மத்தியச் சாலை நிதித் திட்டத்தின்கீழ் எடுத்துக்

கொள்ளப்பட்ட எட்டுப் பாலங்கள், 1976—77 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும். சென்னை மாநகரிலும் அதை அடுத்துள்ள பகுதிகளிலும் சாலைகள், பாலங்கள் சீரமைக்கவும், முக்கியமான நடை பாதைக் கடவுகளில் சுரங்கப் பாதைகள் அமைக்கவும் மத்திய அரசு நிதி உதவியுடன் சிறப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பாதித்த கொடிய வறட்சியின் காரணமாக, சென்ற கோடைப் பருவத்தின்போது சென்னை மாநகரில் கடுமையான நீர்ப்பற்றுக்குறை ஏற்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ஏழாண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட வீராணம் குடிநீர்த் திட்டம் நிறைவேறுவதில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. இத் திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் தற்போது பரிசீலனையில் இருந்து வருகின்றன. இதன் அடிப்படையில், சென்னை மாநகரின் குடிநீர் நிலைமையில் விரைவில் முன்னேற்றம் ஏற்பட, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அண்மையில் பிரதமர் சென்னை வந்தபோது கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைக்காக 1,500 கோடி கன அடி நீரை வழங்க ஆந்திரப் பிரதேசம், மராட்டியம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் முன் வந்துள்ளன என்று அறிவித்தது, வரவேற்கத்தக்க புதிய திருப்பமாகும். இதற்கான கிருஷ்ணா-பெண்ணாறு திட்டத்தின் முன்னோடி ஆய்வுகளை மேற்கொள்ளு வதற்கென, வரும் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.

நிதி நிலைமை

இனி, வரவினங்கள், செலவினங்கள் பற்றி ஆராய்வோம். 1975—76 ஆம் ஆண்டில் வருவாய்க்



கணக்கில் 30·12 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்குமென்றும், எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாகப் பார்க்கும்போது 20·57 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. திருத்திய மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 7·76 கோடி ரூபாயாகவும், மொத்தத்தில் பற்றாக்குறை 6·26 கோடி ரூபாயாகவும் இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது நிதி நிலைமையில் ஏற்பட்டுள்ள இந்த சாதகமான மாறுதலுக்கு முக்கிய காரணம் சொத்து, வருமான விவரங்களைத் தாமாக அறிவிக்கும் திட்டத்தின்கீழ் (Voluntary Disclosure Scheme) மாநில அரசுக்குக் கிடைத்துள்ள வரவே ஆகும்.


1976–77 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கின் கீழ், வரவுகள் 575·63 கோடி ரூபாயாகவும் செலவுகள் 587·95 கோடி ரூபாயாகவும், ஆகவே பற்றாக்குறை 12·32 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1975–76 ஆம் ஆண்டில் 41·76 கோடி ரூபாயாக இருந்த மூலதனச் செலவுகள், 1976–77 ஆம் ஆண்டில் 60·40 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, மூலதனக் கணக்கு ஆகியவற்றை ஒருங்கு சேர்த்து முழுமையாகப் பார்க்கும் போது 9·98 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**கூடுதல் நிதி திரட்டும் முயற்சிகள்**

வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை உயர்த்தியாக வேண்டிய அவசியம் ஓர் புறம்; தமிழ்நாட்டின் நிதி ஆதாரங்கள் குன்றியுள்ளது மறுபுறம்; இதுவே இன்று நாம் காணும் நிலை. திட்டத்திற்கு அப்பாற்பட்ட இனங்களில், தேவையற்ற தவிர்க்கக் கூடிய செலவுகளைக் குறைப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம். குடியரசுத் தலைவர் ஆட்சி, அரசின் வருவாய் நிர்வாகத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் உருவாக்கியுள்ளது. எனவே வரிகள், அரசின் பிற வரவுகள் ஆகியவற்றை வசூலிப்பதில் தக்க முன்னேற்றத்தை நாம் எதிர்பார்க்கலாம். இவற்றின் விளைவாக, செலவில் சிக்கனம், வருவாய்களில் உயர்வு ஏற்படுமென்றாலும், கூடுதல் நிதி வசதிகளை ஓரளவுக்குத் திரட்டுவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

இந்தப் பின்னணியில், பின்வரும் நிதி திரட்டும் முயற்சிகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம் :

(i) தமிழ்நாட்டில் பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தும் செயல் திட்டத்தை முந்தைய அரசு அறிவித்திருந்தது. இந்த உயர்வின் மூலம் பேருந்து உடைமையாளர்களுக்கு கிடைக்கும் அதிகப்படி வருமானத்தில் ஒரு பகுதி அரசுக்குக் கிட்டும் வகையில் மோட்டார் வண்டிகள் வரி உயர்த்தப்படும். வெளியூர் பேருந்துகளில் காலாண்டுக்கு இருக்கை ஒன்றிற்கு 180 ரூபாய் என்று இருக்கும் வரி, 225 ரூபாயாக உயர்த்தப்படும் ; விரைவுப் பேருந்துகளில் காலாண்டுக்கு இருக்கை ஒன்றிற்கு 200 ரூபாயாக இருக்கும் வரி, 240 ரூபாயாக உயர்த்தப்படும்.



(ii) வரி தவிர்த்தலையும், வரி அமைப்பில் முரண்பாடுகளையும் சீர்படுத்தும் வகையில் தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி அமைப்பில் சில திருத்தங்கள் தேவைப்படுகின்றன. பத்து இலட்ச ரூபாய் என்ற மட்டத்துக்கு மேல் விற்பனை உள்ளவர்கள் மட்டுமே கூடுதல் விற்பனை வரி செலுத்த வேண்டுமென்பது தற்போது உள்ள நிலைமை. மத்தியப் பிரதேச மாநிலத்தில் இதற்கான எல்லை 50,000 ரூபாய் அளவில் தான் உள்ளது. சில மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, நமது மாநிலத்தில் விற்பனை அளவை நாம் பெரிய அளவில் உயர்வாக அமைத்திருப்பது தெளிவாகும். எனவே, வரிக்குட்பட்ட விற்பனை அளவு மூன்று இலட்ச ரூபாயிலிருந்து ஐந்து இலட்ச ரூபாய் வரை இருக்கும் போது கூடுதல் விற்பனை வரி 0·4 சத வீதமாகவும், ஐந்து இலட்ச ரூபாயிலிருந்து ஏழு இலட்ச ரூபாய் வரை இருக்கும்போது கூடுதல் விற்பனை வரி 0·5 சத வீதமாகவும், ஏழு இலட்ச ரூபாயிலிருந்து பத்து இலட்ச ரூபாய் வரை இருக்கும்போது கூடுதல் விற்பனை வரி 0·6 சத வீதமாகவும், பத்து இலட்ச ரூபாய்க்கு மேல் இருக்கும் போது கூடுதல் விற்பனை வரி 0·7 சத வீதமாகவும் மாற்றி அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கூடுதல் விற்பனை வரி, பண்டம் வாங்கும் பொது மக்களைப் பாதிக்காது. இது வணிகர்களே ஏற்றுக் கொள்ள வேண்டிய வரியாகும்.

(iii) 1963 ஆம் ஆண்டுக்குப் பிறகு பாசனக் கட்டணங்கள் தமிழ்நாட்டில் மாற்றப்படவில்லை. மாநிலத்திலுள்ள பாசனத் திட்டங்களைப் பரிபாலிப்பதில் வரவை விட செலவு கூடுதலாக ஏற்பட்டு அதன் மூலம் ஆண்டுக்குப் பத்துக் கோடி ரூபாய் இழப்பு இருந்து வருகின்றது. இரண்டு வரிகளின் மூலம் இந்த இழப்பில் ஒரு பகுதியை ஈடு செய்யத் தீர்மானித்துள்ளோம். முதலாவதாக, முதல் வகைப் பாசன ஆதாரங்களின்கீழ் வரும் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 12 ரூபாய் என்ற வீதத்திலும், இரண்டாம் வகைப் பாசன ஆதாரங்களின்கீழ் வரும் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 10 ரூபாய் என்ற வீதத்திலும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிக்க முடிவு செய்துள்ளோம். இந்த இரு வகைப் பாசன ஆதாரங்கள், ஆண்டில் எட்டு முதல் பன்னிரண்டு மாதங்கள் வரை போதிய அளவு பாசனம் அளிப்பவை. மானாவாரிக்குளங்கள் போன்றவை அடங்கிய மூன்றும், நான்காம், ஐந்தாம் வகைப் பாசன ஆதாரங்களின்கீழ் வரும் விவசாயிகளுக்கு வரி உயர்வு எதுவும் ஏற்படாது. இரண்டாவதாக, அடுத்துள்ள மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், மராட்டியம் போன்றவற்றைப் பின்பற்றி, பணப் பயிர்கள் மீது தனித் தீர்வை விதிக்க முடிவு செய்துள்ளோம். கரும்பு, திராட்சை, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 25 ரூபாய் என்ற வீதத்திலும், புகையிலை, மிளகாய், ஆகியவற்றிற்கும், பாசன வசதியுடன் பயிரிடப்படும் பருத்தி, நிலக்கடலை ஆகியவற்றிற்கும் ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 ரூபாய் என்ற வீதத்திலும் இந்தத் தீர்வை விதிக்கப்படும். ஆதாயம் தருகின்ற பணப் பயிர்களிலிருந்து பயன் பெறும் விவசாயிகளது நிகர வருமானத்தில் ஒரு சிறு பகுதியாகவே இந்தத் தனித் தீர்வை இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மேற்கூறிய நிதி திரட்டும் முயற்சிகள் சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள மக்களையோ, சாதாரணப் பொது மக்களையோ பாதிக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என நம்புகிறேன். வேளாண்மைத்துறையும், பிற துறைகளும் தத்தம் சக்திக்கேற்றவாறு வரிப் பொறுப்பை ஏற்கும் வகையில் தமிழ்நாட்டின் வரி விதிப்பு அமைப்பில் மாற்றம் செய்வதன் மூலமாகவே வளர்ச்சிப் பணிகளை விரைவு படுத்தவும் விரிவு படுத்தவும் இயலும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் காணப்படும் புதிய வளர்ச்சி

வேகம், வரும் ஆண்டுகளிலும் தொடர இயலும் வகையில் நிதி வாயில்களை மேம்படுத்துவதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு, முன் கூறிய வரி விதிப்பு யோசனைகளை உருவாக்கியுள்ளோம். வரி விதிப்புகளை இந்தப் பின்னணியில் இந்த அவை ஆய்வு செய்ய வேண்டும் எனக் கோருகிறேன்.

எழுதுகோல் (Pencils), குறிப்பேடுகள் (Note books) இவற்றின் மீது தற்போது விதிக்கப்படும் 4 சத வீத பல முனை விற்பனை வரி, இருபதம்சத் திட்டத்தை யொட்டி, நீக்கப்படும். வாணிபம் பிற இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கும் பொருட்டும், இடர்ப் பாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையிலும் வேறு சில சலுகைகள் அளிக்கவும் முடிவு செய்துள்ளோம். மாநிலத்துக்கு வெளியே விற்கப் படும் பருத்தி நூல் மீதான வரி 3 சத வீதத்திலிருந்து 2 சத வீதமாகக் குறைக்கப்படும். உலர் மின் கலங்கள் (dry cells) மீதான வரி 15 சத வீதத்திலிருந்து 9 சத வீதமாகக் குறைக்கப்படும். பயணிகள் மோட்டார் வண்டிகள் (Passenger Cars) மீதான வரி 15 சத வீதத்திலிருந்து 12 சத வீதமாகக் குறைக்கப் படும். மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு விற்கப் படும் பயணிகள் மோட்டார் வண்டிகள், சிறிய டீசல் வண்டிகளுக்கு (light diesel vehicles) மத்திய விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

மோட்டார் வண்டிகள் வரி, கூடுதல் விற்பனை வரி இவற்றில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், 1976 ஏப்ரல் முதல் நாளிலிருந்து செயலுக்கு வரும். கூடுதல் தண்ணீர்த் தீர்வையும் பணப் பயிர்கள் மீதான தீர்வையும் வரும் நில வரி ஆண்டிலிருந்து, அதாவது 1976 ஜூலை முதல் நாளிலிருந்து செயலுக்கு வரும். வரிச் சலுகைகள் உடனடியாகச் செயல்படத் தொடங்கும்.

கூடுதல் வரி விதிப்பு முயற்சிகள், ஆண்டு ஒன்றில் 10·5 கோடி ரூபாய் வருவாய் தரும் என்று எதிர்பார்க் கிறோம். வரிச் சலுகைகள் விளைவாக ஆண்டு ஒன்றில் 1·5 கோடி ரூபாய் வருவாய் குறையும். இவை அனைத்தின் விளைவாக நிகரமாக முழு ஆண்டில் 9·0 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும். இதன்படி வருவாய்க் கணக்கில் பற்றுக்குறை 3·32 கோடி ரூபாயாகக் குறைந்து, மொத்தத்தில் பற்றுக்குறை 0·98 கோடி ரூபாயாக நிற்கும். இந்தச் சிறிய பற்றுக்குறை, சிக்கன முயற்சிகளின் பலனாகவும், வரி வசூலிப்பதில் ஏற்படும் முன்னேற்றத்தின் விளை வாகவும், நீங்கிவிடும் என்று நம்புகிறோம்.

பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ் நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தை மீண்டும் நான் சமர்ப்பிக்கும் இவ்வேளையில், தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்டம் 200 கோடி ரூபாய் வரம்பைத் தாண்டியிருப்பது கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பின் தங்கி நின்றிருந்த தமிழ்நாடு, நமது நாட்டின் வளர்ச்சிக் குறிக்கோள்கள் அடங்கிய இருபதம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மீண்டும் முன்னணிக்குக் கொண்டு வரப்படும் என்பது எனது அசையாத நம்பிக்கை. உழைப்பும் அறிவும் பொருந்திய மக்களே, தமிழ் நாட்டின் தலையாய சொத்து என்பதைப் பெருமிதத் தோடு நானே எடுத்துக் கூறுவது தவறில்லை எனக் கருதுகின்றேன். அத்தகைய தமிழ்நாட்டு மக்கள், தேசீய வாழ்வுடன் தமிழ்நாடு இணைந்துள்ள இந்தத் தருணத்தில், எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பணிகளிலும், சமுதாய மேம்பாட்டு முயற்சிகளிலும் தங்களை ஆர்வமுடன் ஈடுபடுத்திக்கொள்வார்கள் என்பதில் எனக்கு ஒரு சிறிதும் ஐயமில்லை.

1976—77 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் வரவு-செலவுத் திட்டத்திற்கு அவை தனது ஒப்புதலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடிக்கின்றேன்.

# சிறு துளி பெரு வெள்ளம்

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

TNSC BANK

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. சீசன் டெபாஸிட்டுகள்- ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை — 3.25%
   46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை — 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

| காலம் | வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.75% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.25% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.25% |
| 3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.25% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.25% |

3. சேவிங்ஸ் கணக்கு — 5.75%
4. நடப்பு (current) கணக்கு — வட்டி கிடையாது



## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,

379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் : MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெணாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB : 122/75

# 'இலக்கியச் செல்வத்தை இசையினில் வடித்தவர்'

**— ஆர். வி. சுப்ரமணியன்**
(ஆளுநரின் ஆலோசகர்)

"பழம் பெரும் நாடு, நமது நாடு. மாபெரும் இலக்கியம், கலை, கலாச்சாரம், பாரம்பரியம் கொண்ட பூமி இது. நமது நாட்டின் வரலாறு, நமது சிறந்த ஆண்கள், பெண்களின் வரலாறுகும். அவர்களே நம் நாட்டின் வரலாற்றையும் வடிவமைத்து உருவாக்கினார்கள். பல ஆண்டுகளில் நமது கலையும் கலாச்சாரமும் எவ்வாறு வளர்ந்துள்ளன என்று அறிந்து கொள்வதற்கு, அக்காலங்களில் வாழ்ந்த மாபெரும் மனிதர்களைப் பற்றி நமது மக்கள் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த விஷயத்தில், வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களிலும் சிறந்து விளங்கிய நமது மாபெரும் ஆண்களையும் பெண்களையும் முக்கியமான நிகழ்ச்சிகளில் நினைவுத் தபால் தலைகள் வெளியிடுவதன் மூலம் தபால்-தந்தி இலாகா சிறப்பித்து வருவது உண்மையில் மகிழ்ச்சி தருகிறது. இன்று அத்தகைய ஒரு விழாவில், மாபெரும் இசை மேதை முத்துஸ்வாமி தீட்சிதர் நினைவைச் சிறப்பிக்கும் வகையில் நினைவுத் தபால்தலை வெளியிடப்படும் இந்த விழாவில் கலந்து கொள்ளும் பேறு எனக்குக் கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

"மூன்று இசை மேதைகளாகிய தியாகராஜர், சியாமா சாஸ்திரி, முத்துஸ்வாமி தீட்சிதர் ஆகியோரை உலகுக்கு அளித்ததற்காகத் தமிழ்நாடு பெருமைப்பட முடியும். அவர்கள் தமிழ்நாட்டின் இசை மகுடத்தின் மூன்று மணிகள். இசையில் ஆழ்ந்த ஞானமும் பற்றும் கொண்ட குடும்பம் ஒன்றில் தீட்சிதர் தோன்றினார். தமிழ்நாட்டில் கலாச்சார மறுமலர்ச்சி தோன்றியிருந்த காலத்தில் அவர் பிறந்தார். 1775-ல் பிறந்த முத்துஸ்வாமி தீட்சிதர், கல்விகளில் மிகச் சிறந்து விளங்கினார். அவரின் இளமைக் காலத்திலேயே, அவர் ஓர் இசை அறிஞர் என்பது தெளிவாயிற்று. தந்தையின் உதவியுடன் அவரது இசைப் பயிற்சி துவக்கப்பட்டது. முத்துஸ்வாமி தீட்சிதரின் பெருமை, அவரது அணிநலம் வாய்ந்த சமஸ்கிருத சாகித்தியத்திலும், ராக ஆலாபனையின் உருக்கமான ஓட்டத்திலுமே அடங்கியிருக்கிறது. தீட்சிதரின் மாபெரும் கீர்த்தனைகளில் அடங்கியுள்ள அழகு எவரையும் கொள்ளை கொண்டு விடும். அவரது கீர்த்தனைகளில் உள்ள நயம், அழகு, பக்தி ஆகியவை, கேட்பவர்களை இறையுணர்வில் ஆழ்த்தும்.



முத்துஸ்வாமி தீட்சிதரின் நினைவுத் தபால் தலைகள் கொண்ட ஆல்பத்தை அவரது கொள்ளுப்பேரன் திரு. பாலுசாமி தீட்சிதர் பெறுகிறார்.

"தீட்சிதர் இசையின் பல்வேறு துறைகளையும் நன்கு பயின்றவர் என்ற உண்மைக்கு, அவரது கீர்த்தனைகளே சான்றாகத் திகழ்கின்றன. வீணையில் அவரது நிபுணத்துவம் மிக மேம்பட்டது. மாபெரும் தஞ்சை நால்வருக்கு தீட்சிதர் தமது கீர்த்தனைகளைக் கற்பித்தார். அந்நால்வரின் மூலம், அவரின் கீர்த்தனைகள் இறவாத்தன்மை எய்தின. தீட்சிதரின் கீர்த்தனைகளில் பல அவர் பயணம் செய்த பல்வேறு இடங்களில் வீற்றிருந்த கடவுளைப் பற்றியே இருந்த போதிலும், இன்னொரு கலைஞருக்குத் தனிப்பட்ட பரிசாக, நடனத்துக்கான இசையையும் அவர் உருவாக்கினார். அவரது கீர்த்தனைகள் அழியாத, இலக்கிய, அறிவுத் திறன் கொண்டவை.


"முத்துஸ்வாமி தீட்சிதரின் கீர்த்தனைகளில் மொத்தம் முப்பது கீர்த்தனைகளைச் சாதாரண ராகத்திலும், அதைச் சார்ந்த ராகங்களிலும் தெரிந்தெடுத்து வெளியிடுவதற்கு புது டில்லி, சங்கீத நாடக அகாடெமி முயற்சிகள் மேற்கொண்டிருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.


"இந்தத் தபால்தலைகள், இசைத் துறையிலும் மற்ற கலாச்சார நடவடிக்கைகளிலும் நாம் மேற்கொள்ளும் எல்லா ஈடுபாடுகளிலும் தீட்சிதரின் இசைப் படைப்புக்களுடைய முத்திரையைப் பதிக்கட்டும்! முத்துஸ்வாமி தீட்சிதர் நினைவுத் தபால் தலையை வெளியிடுவதில் நான் இப்பொழுது பெருமகிழ்ச்சி அடைகிறேன்."


**(18-3-'76 அன்று முத்துஸ்வாமி தீட்சிதரின் அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் பேசிய உரை)**

# செய்தியே! சித்திரமே!


புரதச்சத்து மிகுந்த பயறு வகைகளை
10 இலட்சம் ஏக்கரில் பயிரிடுவதற்
குத் தமிழ் நாடு அரசு திட்டமிட்டுச்
செயலாற்றி வருகிறது.


பின்தங்கிய நிலையில் உள்ள தமிழ்
நாட்டை மீண்டும் முன்னேற்ற
வேண்டுமென்பதற்காக, 1976-77-ஆம்
ஆண்டுத் திட்டத்திற்கு ரூபாய் 201
கோடி ஒதுக்க இந்திய அரசு ஒப்புதல்
அளித்துள்ளது.
தமிழ் நாடு அரசு
வாய்மையே வெல்லும்
1976-77
திட்ட உதவி
ரூ. 201 கோடி


சென்னை நகருக்குக் கிருஷ்ணை நதியி
லிருந்து தண்ணீர் கொண்டுவரும்
திட்டத்தின் முன்னோடி ஆய்வுகளுக்கு
ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்
டுள்ளது.



புத்தகக் கடை
மாணவர்களுக்கு
பென்சில்
நோட்டு
இங்கே
கிடைக்கும்
விற்பனை வரி
இருபது அம்சத் திட்டத்தையொட்டி, பென்சில், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றின்மீது தற்போது விதிக்கப்படும் 4 சதவீத பலமுனை விற்பனைவரி நீக்கப்படும்.
தமிழ்நாடு மின்வாரியத்தில் பொது மக்கள் தொடர்புத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.
கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லை
சாமி

கிராம வளர்ச்சியில் பத்தாண்டுச் சாதனை—1

# வேளாண்மை உற்பத்தியில் வரலாறு காணாத வளர்ச்சி

வேளாண்மை உற்பத்தியில் உலகத்திலேயே உன்னதமான வளர்ச்சி, சென்ற பத்து ஆண்டுக் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பத்து ஆண்டுக்காலத்தின் முற்பாதியில் கோதுமை உற்பத்தி இரட்டிப்பாகி இருக்கிறது. இந்த உற்பத்திப் பெருக்கத்திற்கு, உலகத்தில் வேறெந்த நாட்டையும் ஈடாகச் சொல்ல முடியாது.

1960-லிருந்து 1970 வரையிலான பத்தாண்டுக் காலத்தின் முற்பாதியில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 110 இலட்சம் டன் ஆக இருந்த கோதுமை உற்பத்தி 1971-72-இல் 260 இலட்ச டன்னுக்கும் அதிகமாக இருந்தது.

மொத்த உணவு தானிய உற்பத்தி அளவு 1964-'65-இல் 894 இலட்சம் டன்னாக இருந்தது. அது 1970-'71-இல் 1,080 இலட்சம் டன்னாகப் பெருகி உள்ளது. 1975-'76-இல் 1,140 இலட்சம் டன்னை எட்டும் போக்கில் அமைந்திருக்கிறது.


நீண்டகாலக் கண்ணோட்டத்தில் இதைவிட முக்கியமான அம்சமாக இருப்பது என்னவென்றால், சுலப ஆண்டுகளுக்கும் சிரம ஆண்டுகளுக்கும் இடையே உள்ள உற்பத்தி ஏற்றத் தாழ்வுகள் மிக கணிசமாகக் குறைக்கப்பட்டுவிட்டன என்பதாகும். உதாரணமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், 1968-69-ஆம் ஆண்டோடு முடிவடைந்த மூன்று ஆண்டுத் திட்டங்களிலும் உணவு தானிய உற்பத்தி 720 இலட்சம் டன்னும் 940 இலட்சம் டன்னுக்கும் இடைப்பட்டு ஏறி இறங்கி வந்தது. ஆனால் பிந்தைய ஆண்டுகளில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் அந்த உற்பத்தி ஏற்றத்தாழ்வு 950 இலட்சம் டன்னுக்கும், 1080 இலட்சம் டன்னுக்கும் இடைப்பட்டுத்தான் இருந்தது. அதற்கும் பிந்தைய ஆண்டுகளில் உற்பத்தி விகித ஏற்றத்தாழ்வுகள் மேலும் குறைக்கப்பட்டதால், 1972-73, 1974-75-ஆம் ஆண்டுகளில்—முன் எப்போதும் இருந்திராத அளவிற்கு வறட்சி நிலை இருந்த போதிலும்கூட—நாட்டின் உற்பத்தி அளவானது 1,000 இலட்சம் டன்னுக்குக் குறையவில்லை.

நாட்டின் உணவு உற்பத்தி நன்றாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் சாதாரணப் பருவ மழை உள்ள ஓர் ஆண்டில் உற்பத்தி அளவு, நாட்டின் உள்நாட்டு தேவைகள் அவ்வளவையும் சமாளிக்கக்கூடியதாய் இருக்கிறது. இது 1975-'76-இல் கிடைத்த உற்பத்தி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## பணப் பயிர்கள்

இதே போல் உணவு தானியங்கள் அல்லாத மற்றப்பயிர்களிலும் வியந்து பாராட்டக்கூடிய பலன்கள் ஏற்பட்டுள்ளன.

பஞ்சு இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருந்த இந்தியா, இப்போது ஏற்றுமதி இறக்குமதி இரண்டையும் சேர்த்தால் நிகர அளவில் பஞ்சு ஏற்றுமதி செய்யும் ஒரு நாடாக மாறியிருக்கிறது. 1965-'66-ல் 40 இலட்சம் பொதி பஞ்சு உற்பத்தி செய்யப்பட்டன. 1974-'75-ல் அந்த உற்பத்தி 66.9 இலட்சம் பொதிகளாக உயர்ந்து விட்டிருக்கிறது.







சணல் உற்பத்தி அளவு இதே போல் 45 இலட்சம் பொதிகளாக இருந்தது, 1973-'74-ல் 65.6 இலட்சம் பொதிகளாக அதிகரித்து உள்ளது.

கரும்பு உற்பத்தியை வெல்லம் உருவத்தில் கணக்குப் பார்த்தால், 1973-'74-இல் இதுவரை எப்போதும் எட்டியிராத உச்ச அளவான 144 இலட்சம் டன்னை எட்டிவிட்டது. இந்த உச்ச சாதனை 1974-75-ஆம் ஆண்டிலும் அதே நிலையில் உள்ளது.

### புதிய அலுவல் முறை

இந்தச் சாதனைகள் சாத்தியமானதற்கு இந்தப் பத்தாண்டு கால ஆரம்பத்தில் புதிய அலுவல் முறை ஒன்று கடைப்பிடிக்கப்பட்டது தான். இந்தப் புதிய அலுவல் முறை விஞ்ஞானத்தின் தொழில்நுட்பத்தையும் மேலும் மேலும் அதிக அளவில் உபயோகபடுத்தி வரவேண்டும் என்று வற்புறுத்தியது.

நல்ல உயர்ந்த ரக விதைகளை கிடைக்கும்படி செய்வது, நிலத்தையும் நீரையும் மேலும் சிறந்த முறையில் பயன்படுத்துவது, பல போகப் பயிர் செய்வது, இரசாயன உரங்கள் போதுமான அளவிற்குக்கிடைக்கும்படி செய்வது, பயிர்ப் பாதுகாப்புக்கான விரிந்த பரந்த ஏற்பாடுகள், கடன் வசதி, விற்பனைப்பெருக்க வழி, ஆராய்ச்சி ஏற்பாடுகள் ஆகியவைகளுக்கான கட்டடமைப்புகளை உருவாக்கி வருவது ஆகியவையே புதிய அலுவல் முறையின் சிறப்பு அம்சங்களாகும்.

இவைகளும், இந்தியாவில் உள்ள எண்ணற்ற விவசாயப் பெருமக்களின் தொழிற்திறமை, புதிய புதிய ஆராய்ச்சிகளைக் கண்டறிந்து கையாளும் மனப்பான்மை, கடின உழைப்பு ஆகியவைகளும் சேர்ந்து இந்தியாவை உணவு தானியங்களில் மட்டும் இன்றி இன்னும் வேறு பல பயிர்கள் உற்பத்தியிலும் தன்னிறைவுப் பாதையில் முன்னேறும்படி செய்திருக்கின்றன. இவ்வாறு பெருவாரியான விவசாய மக்களை இப்பெரும் முயற்சியில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பது இந்தப் புதிய நடவடிக்கையின் மையக்கருத்தாகும்.

## தமிழ்நாட்டிற்கு ரூபாய் 2 கோடி வரிச் சலுகை


தமிழ்நாட்டிற்கான 1976-'77-ஆம் ஆண்டின் பட்ஜெட் 24—3—76 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. அப்பொழுது, ஓராண்டில் ரூ. 2 கோடி அளவிற்கு வருவாயை இழக்கக்கூடிய வரிச் சலுகைகளை இந்திய நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் அறிவித்தார். இந்த வகையில் அளிக்கப் பெற்றுள்ள வரிச் சலுகைகளின் விவரம்:

1. வெளியூர் பயணப் பேருந்துகளின் வரி குறைக்கப்படும். காலாண்டிற்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 225 என உத்தேசிக்கப்பட்டிருந்த தீர்வை, இப்பொழுது காலாண்டிற்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 215 என ஆக்கப்படுகிறது.

2. திராட்சை, கரும்பு, வெற்றிலை, மஞ்சள் போன்ற வணிகப் பயிர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த தீர்வை ஏக்கருக்கு ரூபாய் 25 ஆகும். அது தற்பொழுது ஏக்கருக்கு ரூபாய் 20 ஆக குறைக்கப்படுகிறது.

3. புகையிலை, மிளகாய், பாசன வசதியுள்ள நிலங்களில் விளைந்த பருத்தி, வேர்க்கடலை போன்ற பணப் பயிர்களுக்கு, முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த 'செஸ்' தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 15 ஆகும். ஆனால் அதுவும் தற்பொழுது குறைக்கப்பெற்று, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 12.50 ஆகிறது.

இந்தச் சலுகைகளின்மூலம் ஆண்டொன்றுக்கு 2 கோடி ரூபாய் அளவிற்கு வருவாயை இழக்க வேண்டியிருக்கும் என்றும், இந்த வரிச் சலுகைகளை அனைவரும் வரவேற்பார்கள் என்றும், தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகைகள், பல்வேறு சங்கங்கள், பொதுமக்கள் ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தையும் மிகவும் உன்னிப்பாகப் பரிசீலித்து இந்த வரிச் சலுகைகளை வழங்க முடிவு செய்யப்பட்டது என்றும் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.










# படமும் செய்தியும்

1, 2. தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்கள் 13-3-,76 அன்று நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தையும், விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற் சாலையையும் பார்வையிட்டார்.





3, 4. தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் மார்ச்சு 15, 16 தேதிகளில் திருநெல்வேலி மாவட்டக்கில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது பொது மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, ஆவன செய்தார்.

5, 6. மகளிர் சேவை மன்ற விழாவில் (16—3—'76) தமிழக ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி மதுபென் ஷா அவர்கள் கலந்துகொண்டார்.

7. விரைவில் திறப்புவிழா நடைபெறவிருக்கும் வள்ளுவர் கோட்டத்தை ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் பார்வையிட்டார். தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்களும் உள்துறைச் செயலாளர் திரு. கே. சுப்ரமணியம் அவர்களும் உடன் உள்ளனர்.


8. இந்திய அரசு தொழில், நுகர் பொருள் விநியோகத் துறையின் மாநிலங்கள் அமைச்சர் திரு ஏ. சி. ஜார்ஜ் அவர்கள் 19-3-'76 அன்று தண்டையார் பேட்டையில், யுனைடெட் இந்தியா ரோலர் மாவு மில் நிறுவனத்தின் 'சி' மில்லைத் திறந்து வைத்தார்.











# தமிழ்நாட்டில் கிராமத்தொழில் முன்னேற்றத்திற்கு மத்திய உதவி!

எஸ். முத்தையன் - கிராமத்திட்ட இணை இயக்குநர்

நமது நாட்டில் தொழில்கள் பரவலாக அமைய வேண்டும். அதன் பயன்கள் இந்தியாவின் உள்பகுதிகளில் உள்ள கிராம மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் 1962-ஆம் வருடத்தில் இந்தியா முழுமையிலும் உள்ள சில பிற்பட்ட பகுதிகளில் 49 கிராம முன்னோடித் திட்டங்களை அமைத்தது; இவற்றில் தமிழ்நாட்டிற்கென்று மூன்று திட்டங்களை ஒதுக்கியது. இந்த மூன்று திட்டங்களும் தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தொழில் துறையிலும் மற்றத் துறைகளிலும் மிகவும் பிற்பட்ட பகுதிகளான ஸ்ரீபெரும்புதூர், ஓமலூர், நாங்குநேரி வட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டங்களின் குறிக்கோள், பொதுவாக பிற்பட்ட பகுதிகளின் மக்களுடைய முன்னேற்றமும், குறிப்பாக இத்திட்டப் பகுதிகளில் உள்ள பல்வேறு தொழிலாளர்களுக்கு நவீன முறையில் பயிற்சி அளித்தும் தொழில் துவங்கக் கடன் உதவி, குறைந்த வட்டி விகிதத்தில் அளித்தும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், மாதிரித் தொழிற்சாலைகளை அமைத்து, இப்பகுதிகளில் பல்வேறு இதர தொழில்களை அமைக்க ஊக்குவித்தல், பொதுவசதித் தொழில் நிலையங்களை அமைத்து இப்பகுதிகளில் உள்ள விவசாயிகளும், மற்றத் தொழிலாளர்களும், தங்களுக்கு வேண்டிய கருவிகள், தளவாடச் சாமான்கள் செய்து கொள்ளவும், பழுது பார்த்துக் கொள்ளவும், மற்றும் முன் மாதிரித் திட்டங்களை அமைத்தல் முதலியன ஆகும்.


இத்திட்டப் பகுதிகளில் தனிப்பட்டவர்களுக்குப் புதிய தொழில்களைத் துவங்கவும், ஏற்கெனவே உள்ள தொழில்களை வளர்க்கவும் மத்திய அரசாங்கத்தின் கடன் வசதிகள், குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படுகின்றன. இந்தக் கடன் உதவி, தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது. இதற்கு மேல் தேவையான கடன் வசதிகள் தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகளின் மூலம் வழங்க உதவப்படுகிறது. நமது இந்திய அரசாங்கம் இத்திட்டத்தை நமது நாட்டில் பட்டணங்களையும் பெரிய நகரங்களையும் தள்ளி, உட்பகுதிகளில் உள்ள கிராம மக்களின் முன்னேற்றம் குறித்து அமைத்துள்ளது. எனவே இத்திட்டம் மக்கள் தொகை 15,000-க்கு மேற்படாமல் உள்ள கிராமங்களில் மட்டும் அமலாக்கப்படுகிறது. இது, இத்திட்டத்தின் ஒரு சிறப்பு அம்சமாகும்.

### தொழிற் பயிற்சி நிலையங்கள்

இந்தக் கிராமத் தொழில்கள் திட்டத்தின் கீழ், மேலே சொல்லப்பட்ட மூன்று திட்டப்பகுதிகளிலும் மத்திய அரசாங்கத்தின் மானிய உதவியுடனும், கடன் உதவியுடனும் பல்வேறு தொழிற் பயிற்சி நிலையங்களும் பொது வசதித் தொழிற் பட்டறைகளும் உற்பத்தித் தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டன. தொழிற் பயிற்சி நிலையங்களின் மூலம் இந்தத் திட்டப்பகுதிகளில் உள்ள பல்வேறு தொழிலாள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்நாட்டில் மற்ற முன்னேற்றமடைந்த பகுதிகளில் உள்ள பல்வேறு தொழில் நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. குறிப்பாக ரேடியோ பழுதுபார்த்தல், அச்சுத் தொழில் செய்தல், மர வேலை செய்தல், மோட்டார் பம்புசெட் பழுது பார்த்தல், நவீன முறையில் திருகு ஆணிகள் செய்தல், தோல் பொருள்கள் செய்தல், உல்லன் காலுறைகள் செய்தல் முதலியவற்றில் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தின் மானியத்தின் மூலம் உதவித் தொகைகள் அளிக்கப்பட்டன.

இவ்வாறு இந்த மூன்று திட்டப் பகுதிகளிலும் ஏறக்குறைய 1,500 நபர்களுக்குப் பல்வேறு தொழில்களில் மத்திய அரசின் உதவித் தொகையோடு பயிற்சி அளிக்கப்பட்டது. பொது வசதித் தொழில் நிலையங்கள் மூலமும், நிறைய மக்கள் பயன் பெற்றனர். செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மிகவும் பிற்பட்ட பகுதியாகிய ஈக்காடு கிராமம், சுங்குவார் சத்திரம் கிராமம் ஆகியவைகளில் இரண்டு பொது வசதித் தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டத்தில் தாரமங்கலம், தீவட்டிப்பட்டி, மேச்சேரி, ஜலகண்டாபுரம் ஆகிய கிராமங்களில் நான்கு பொது வசதித் தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் கண்ணநல்லூர், கோயிலம்மாள்புரம், மூலக்கரைப்பட்டி, களக்காடு, தேவி நல்லூர், மீனவன்குளம், ஈத்தமொழி, திசயன்

விளை, தளபதி சமுத்திரம், பருத்திப்பாடு ஆகிய கிராமங்களில் பத்துப் பொது வசதித் தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டன. இவை யாவும் மத்திய அரசின் முழு மானிய உதவியுடன் அமைக்கப்பட்டன. கிராமங்களில் எதிர்பார்க்கும் அளவுக்கு இந்த நிலையங்களுக்கு வேண்டிய வேலைகள் கிடைக்காது என்றாலும் கிராம மக்களின் முன்னேற்றம் கருதி மத்திய அரசாங்கம் இவைகளை அமைக்க உதவியது. சராசரியாக இந்தப் பொது வசதித் தொழில் நிலையங்களில் ஏறக்குறைய 500 லிருந்து 600 நபர்கள் வரை ஒவ்வொரு நிலையத்திலும் மலிவான அல்லது குறைவான விலையில் பொருள்கள் உற்பத்தி செய்தோ அல்லது பழுது பார்த்தோ பயன் பெற்றனர்.



### மத்திய அரசு உதவியுடன் தொழிற்சாலைகள்

'தொழிற்சாலைகளைப் பரவலாகக் கிராமப்புறங்களிலும் அமைக்க வேண்டும்; கிராம மக்களும் அதனால் பயன்பெற வேண்டும்' என்ற மத்திய அரசின் கொள்கையை நிறைவேற்றும் வகையில் ஸ்ரீபெரும்புதூர் கிராம முன்னோடித் திட்டத்தின் கீழ், செம்பரம்பாக்கத்திலும், திருப்பாச்சூரிலும், நெல்லை மாவட்டத்தில் வள்ளியூரிலும், பொது நோக்குத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. இத்தொழிற்சாலைகளில் விவசாயக் கருவிகள், கட்டடங்கள் கட்டுவதற்கான இரும்புத் தளவாடச் சாமான்கள், மருத்துவ மனைகளுக்கு வேண்டிய உபகரணங்கள் ஆகியவை நேர்த்தியான முறையில் செய்யப்படுகின்றன. ஊத்துக்கோட்டை என்னும் கிராமத்தில் காகித உறைகளும், பாலிதீன் பைகள் செய்யும் உற்பத்திக்கூடமும், மப்பேடு என்னும் ஊரில் தோல் பொருள்கள், காலணிகள் செய்யும் உற்பத்தி நிலையமும் துவக்கப்பட்டன.

சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர் கிராம முன்னோடித் திட்டத்தின் கீழ் ஓமலூர் பாலிதீன் பைகள் செய்யும் தொழிற்சாலை ஒன்றும் தாரமங்கலத்தில் தோல்பொருள்கள் செய்யும் உற்பத்தி நிலையம் ஒன்றும் துவக்கப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி கிராம முன்னோடித் திட்டத்தின் கீழ் வடக்கு விஜயநாராயணம் என்னும் ஊரில் சாக்குத் துண்டுகள் செய்யும் உற்பத்தி நிலையம் துவக்கப்பட்டது.

மேற்கண்ட தொழிற்சாலைகளில் உற்பத்தியோடு சம்பந்தப்பட்ட துறைகளில் கிராம மாணவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. பயிற்சிக் காலத்தில் மத்திய அரசின் மானிய உதவியில் இருந்து பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகைகளும் வழங்கப்பட்டன.

இந்தக் கிராமத் திட்டப் பகுதிகளில் செம்பரம்பாக்கம், திருப்பாச்சூர், வள்ளியூர் ஆகிய கிராமங்களில் மத்திய அரசாங்கத்தின்

## இந்திய அரசின் வருவாயும் – செலவும்....

வரும் ஆண்டில் நிதி அமைச்சர் வசூல் செய்யும் ஒவ்வொரு ரூபாயிலும் 24 பைசா எக்சைசிலிருந்தும், 12 பைசா சுங்க இலாகாவிலிருந்தும், 8 பைசா கம்பெனி வரி மூலமாகவும், 2 பைசா வருமான வரி மூலமும், 2 பைசா மற்ற வரிகள் மூலமும் கிடைக்கும். வரி அல்லாத வருவாய் 15 பைசா. கடன் மீட்பு 12 பைசா. பொதுக்கடன்கள் சிறு சேமிப்பு சேமநல நிதி வகை 9 பைசா, அன்னியக் கடன்கள் 6 பைசா, மற்ற வருமானங்கள் 8 பைசா என்ற அளவில் இருக்கும். 2 பைசா பற்றாக்குறை நிரப்பப்படாமல் இருக்கிறது.

இவ்வாறு வசூலிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் அரசு, திட்டத்துறைக்கு 37 பைசாவும், மற்ற வளர்ச்சிச் செலவுகளுக்கு 19 பைசாவும் செலவு செய்யும். பாதுகாப்புக்கு 19 பைசா செலவாகும். வட்டி வகையில் 11 பைசா, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்குச் சட்டரீதியான நிதிமாற்றமும் மற்றவையும் 6 பைசா, மற்ற செலவுகள் 8 பைசா என்ற அளவில் அமையும்.

உதவியின் கீழ் அமைக்கப்பட்ட மூன்று பொது நோக்குப் பொறியியல் தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் தொழிற்சாலைகள் இப்பொழுது தமிழக அரசின் நிறுவனமான டான்சியின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

**மூலப் பொருள் ஒதுக்கீடு**

கிராம முன்னேடித் திட்டப் பகுதிகளில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களை மத்திய அரசாங்கம் அவ்வப்போது ஒதுக்கித் தருகிறது. சோப்பு செய்யத் தேவையான மூலப் பொருள்கள், எவர்சில்வர் தகடுகள், அலுமினியம், ஈயம், மெழுகு முதலிய மூலப்பொருள்களை மத்திய அரசாங்கம் இத்திட்டங்களுக்கு ஒதுக்கித் தருகிறது. மூலப் பொருள்கள் தவிரத் தொழில்கள் துவங்கவும், தொழில்களைப் பெருக்கவும் மத்திய அரசாங்கம் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வசதி அளிக்கிறது. மத்திய அரசாங்கம் அளித்த குறைந்த விகிதக்கடன் வசதியின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள மூன்று கிராம முன்னேடித் திட்டப் பகுதியில் உள்ள பல்வேறு தொழில்களுக்குக் கடன் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

*1962*-ஆம் வருடத்தில் ஒரு குறிப்பிட்ட பின்தங்கிய பகுதிகளில் மட்டும் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கிராம முன்னேடித் திட்டங்கள் *1971*-ஆம் வருடம் முதற்கொண்டு செங்கற்பட்டு, சேலம், திருநெல்வேலி மாவட்டங்கள் முழுமைக்கும் விஸ்தரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டிற்கு இரண்டு புதிய கிராம முன்னேடித் திட்டங்களை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு ஒதுக்கியுள்ளது. இந்த இரண்டு புதிய திட்டங்களும் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் *1974-75* முதற்கொண்டு செயல்பட்டு வருகின்றன. படிப்படியாக இத்திட்டத்தை இந்தியாவில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்பது மத்திய அரசின் கொள்கை.

*1974-75*-ஆம் வருடத்தில் மட்டும் தமிழ்நாட்டில் உள்ள செங்கற்பட்டு, சேலம், தருமபுரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய ஐந்து கிராமப்புறத் தொழில் திட்டப் பகுதிகளில் ஏறக்குறைய 253 தொழிற்சாலைகளுக்கு ரூ. 9,79,000/- கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை 135 நபர்களுக்கு ரூ. 6,50,000/- கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு மாதங்களில் சுமார் ரூ. 6,00,000 மேலும் கடன் வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கடன் உதவி, தொழிற்சாலைகளுக்கு ஆரம்பக் கால நிதியாகக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகையுடன் சிறு தொழிற்சாலைகள் தங்களுக்கு மேலும் வேண்டிய உதவி நிதியை ஸ்டேட் பாங்க் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களின் கீழ் பல தொழிற்சாலைகள் உதவி பெற முடிந்தது. உதாரணமாக செங்கற்பட்டு, சேலம், இராமநாதபுரம், தருமபுரி, திருநெல்வேலி மாவட்டங்களில் ஏறக்குறைய 943 தொழிற்சாலைகளுக்கு ரூபாய் 269 இலட்சம் தேசிய வங்கிகளில் இருந்து அளிக்கப்பட்டுள்ளது. இந்த உதவியின் கீழ் 1975-76 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட உற்பத்திப் பொருள்களின் மதிப்பு ஏறக்குறைய ரூபாய் 13 கோடியாகும். இந்த ஐந்து திட்டப்பகுதிகளிலும் சுமார் 9,000-க்கு மேற்பட்ட நபர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்க உதவியுள்ளது. இதே முறையில் கடந்த 8 மாத காலங்களில் மேற்படி ஐந்து திட்டப்பகுதிகளில் 500-க்கு மேற்பட்ட தொழில்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மற்றும் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள சுமார் 3,000 தொழிற்சாலைகளைப் பலப்படுத்துவதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்குமான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் சுமார் 1,400 நபர்களுக்கும் தொழில்களுக்கும் 48 இலட்ச ரூபாய் வங்கிகளில் இருந்து நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் திறம்படச் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இத் திட்டத்தைத் தமிழ்நாட்டில் நிருவகிக்கத். தேவையான ஏறக்குறைய ரூ. 10 இலட்சத்தை ஒவ்வொரு வருடமும் மானியமாக மத்திய அரசாங்கம் கொடுத்து வருகிறது.

மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் இதுவரை தமிழ்நாட்டிற்கு 80 இலட்சம் ரூபாய் மானியமாகவும், 98 இலட்சம் ரூபாய் கடனுகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு கிராமத் தொழில் வளர்ச்சிக்காக வகுத்த திட்டங்கள் நடப்பு ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் துடிப்புடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

## ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதை ஊக்குவிக்க வரிச்சலுகைகள்!

1976-77-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் யோசனைகளில் மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதை ஊக்குவிப்பதற்கான வரிச் சலுகைகளை அளிக்க முன் வந்துள்ளார்.

80 சதுர மீட்டர் வரை மனைப்பரப்பு கொண்ட புதிய வீடுகளுக்கு 5 ஆண்டுக்காலத்திற்குச் சொத்து வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ள தொழிலாளர்களுக்கான குடியிருப்புக்களைப் பொறுத்த வரையில் அவற்றைக் கட்டிக் கொடுத்த தொழில் நிறுவனங்களுக்கு 20 சதவிகிதம் வரை ஆரம்பத் தேய்மானப்படி அளிக்க அனுமதிக்கப்படும். தற்போது ஆண்டுக்கு 7,500 ரூபாய் வரை வருமானம் உள்ள தொழிலாளர்களுக்கான குடியிருப்புக்களைப் பொறுத்த வரையில் மட்டுமே இந்த ஆரம்பத் தேய்மானப்படி அளிக்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்காகவும், தொழிற்சாலை ஊழியர்களுக்காகவும் கட்டிக் கொடுக்கப்பட்ட குடியிருப்புக்களுக்கும் சொத்து வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

# கரும்பு சாகுபடியாளர்களுக்கு...

கரும்புச் சாகுபடியாளர்கள் குறுகிய கால கரும்பு ரகங்களைப் பயிரிடுவதற்கு ஊக்க விலைகளை அளிக்கும்படி இந்திய கரும்பு அபிவிருத்திச் சபை சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல்வேறு கரும்பு ஆராய்ச்சி நிலையங்களின் கண்டுபிடிப்புக்களை விரைவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இந்தச் சபை வகுத்துள்ளது. அதனால், நாட்டின் பலபகுதிகளிலும் கரும்பு அபிவிருத்தியில் அந்த ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்த முடியும்.

பல மாநிலங்களிலும் கரும்பு அபிவிருத்திக்காக இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கிய மத்திய அரசு உதவி பெறும் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கரும்பு அபிவிருத்திச் சபை பரிசீலித்தது. மூன்று அடுக்கு முறை ஒன்றின் மூலம், வர்த்தகச் சாகுபடிக்காக நல்ல விதைகளை உற்பத்தி செய்து விநியோகிப்பது, இத்திட்டத்தின் மிக முக்கிய நோக்கமாகும். பெருமளவிலான செயல் முறைகள், நேரத்தோடு கூடிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், பயிற்சி ஆகியவற்றின் மூலம் சர்க்கரை ஆலைகள் இயங்கும் இடங்களில் தீவிர அபிவிருத்தித் திட்டத்தைத் துவக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது.

தற்போதைய கரும்பு உற்பத்தியளவு கணிசமாக உயர்த்தப்பட வேண்டும் என்று கரும்பு அபிவிருத்திச் சபையின் கூட்டத்தைத் துவக்கி வைத்த மத்திய விவசாய அமைச்சகக் காரியதரிசி திரு. கே. எஸ். நரங் கூறினர். சர்க்கரை மிக அதிகமான வெளிச்செலாவணியைத் தேடித் தருவதால், அதன் பெருகி வரும் தேவையைச் சமாளிப்பதற்கு, கச்சாப் பொருளின் உற்பத்திச் செலவு குறைக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினர். கரும்புச் சாகுபடியாளர்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே சுமுகமான உறவு இருக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டில் 17 கோடி டன் கரும்பை உற்பத்தி செய்து குறியளவை அடைவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய தேவையை சபையின் தலைவர் திரு. ஹர்பன் சிங் வலியுறுத்தினர். பிரதமரின் 20 அம்சத் திட்டம் வலியுறுத்தும் நாட்டின் சமூக—பொருளாதார முன்னேற்றத்துக்கு இது ஒரு படியாகும் என்று அவர் சொன்னர்.

## சென்னைப் பெருநகர்ப் புறப்பகுதிக்கு
# ரூ. 8 கோடி கடன் வசதி

சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தமிழ் நாடு அரசாங்கத்துக்கு 2 கோடி ரூபாய் கடன் வழங்க மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கி இருக்கிறது. இந்தக் கடனைப் பெற்ற முதலாவது ஆண்டு முடிவிலிருந்து, 25 சம வருடாந்திரத் தவணைகளில் இக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். தமிழ்நாடு அரசாங்கம், ஆண்டு ஒன்றுக்கு $5\frac{1}{2}$ சதவிகித வட்டித்தொகை செலுத்த வேண்டியிருக்கும்.

சென்னைப் பெருநகர்ப் பகுதியின் தேவைகளை மதிப்பிடுவதற்காக, சென்ற டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து, இந்தக் கடன் உதவி வழங்கப்படுகிறது. அக்கூட்டத்தில் மதிப்பிடப்பட்ட தேவைகள், 8 கோடி ரூபாய் அளவில் இருந்தது. இதில் குடிநீர் விநியோகத்துக்கும், கழிவு நீர் ஓட்டத்துக்கும் மொத்தம் 6 கோடியே 35 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு மதிப்பிடப்பட்டுள்ளது; இதனையடுத்துக் குடியிருப்புப் பகுதி வளர்ச்சிக்காக ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாயும், சாலைகள் அமைப்பதற்காக 45 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மொத்த மதிப்பீட்டுத் தேவைகளான எட்டுக் கோடி ரூபாயில், மத்திய அரசின் பங்கு 2 கோடியே 65 இலட்சம் ரூபாய். மீதமுள்ள 5 கோடியே 35 இலட்சம் ரூபாயை, தமிழ்நாடு அரசாங்கம் அளிக்கும். தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள கடன் போக மீதமுள்ள, மத்திய அரசின் பங்கான 65 லட்சம் ரூபாய் 1976 மார்ச்சு 31-ஆம் தேதிக்கு முன்னுல் செலவிடப்படக் கூடிய செலவுத் தொகையின் மதிப்பீடு முடிவடைந்து பிறகு கவனிக்கப்படும்.

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்றாலே - அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால் — செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது — இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002



# தமிழகத்தின்

# வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு வழங்கிய உதவி

தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணிகளையும், புயல், வெள்ள நிவாரணப் பணிகளையும் மேற்கொள்வதற்காக மத்திய அரசு கணிசமான அளவுக்கு நிதியுதவி வழங்கி வந்திருக்கிறது.

இயற்கை விபரீதங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பதற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அதாவது *1969—70*-லிருந்து *1973—74* வரை, தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ. *31.11* கோடி செலவழித்தது. அதில் மத்திய அரசிடமிருந்து உதவியாகப் பெற்ற தொகை ரூ. *22.76* கோடி.

*1966—67* முதல் *1973—74* வரையான காலத்தில் வறட்சி நிவாரணத்திற்காகவும், புயல் நிவாரணத்திற்காகவும் மத்திய அரசு பின்கண்டவாறு நிதி உதவி செய்துள்ளது:


| ஆண்டு | நிதி உதவி (ரூபாய் கோடியில்) |
|---|---|
| *1966—67* வறட்சி மற்றும் புயல் நிவாரண நிதி ... | *2.50* |
| *1967—68* புயல் நிவாரண நிதி ... | *2.50* |
| *1968—69* வறட்சி நிவாரண நிதி ... | *1.25* |
| *1969—70* வறட்சி நிவாரண நிதி ... | *13.00* |
| *1972—73* வறட்சி, புயல் மற்றும் வெள்ள நிவாரண நிதி ... | *4.76* |
| *1973—74* புயல் மற்றும் வெள்ள நிவாரண நிதி ... | *5.00* |
| மொத்தம் ... | *29.01* |

*1974—75*-ல் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையினால் சென்னை நகரமும், தமிழ்நாட்டில் மற்றும் பல பகுதிகளும் பாதிக்கப்பட்டிருந்த போது, மத்திய அரசு பல வழிகளில் தமிழ்நாடு அரசுக்கு உடனடி உதவிகள் வழங்கியது. வறட்சி நிவாரணத்துக்கான அபிவிருத்திச் செலவுகளுக்காக மத்திய அரசு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் முன் உதவித் தொகையாக வழங்கியது.

அதோடு கூட, சென்னை நகரின் தண்ணீர்ப் பிரச்சினைக்கு நீண்ட கால அடிப்படையில் தீர்வு காண்பதற்காக, இந்தியப் புவி இயல் ஆய்வுத் துறை மத்திய தண்ணீர் ஆணைக் குழு ஆகியவை போன்ற மத்திய துறைகள் மூலமாகத் தொழில் நுட்ப உதவிகளையும் தமிழகஅரசுக்கு மத்திய அரசு வழங்கி வந்தது.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களின் துயர் துடைப்பதற்காக வகுக்கப்பட்ட திட்டத்தின் நடைமுறை மூலதனச் செலவுகளுக்காக, கதர்—கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மத்திய அரசு கடனாக 2.5 கோடி ரூபாயையும், கூடுதல் உதவித் தொகையாக 65 இலட்சம் ரூபாயையும் வழங்க அனுமதி அளித்தது.

இத்திட்டத்தின்கீழ் *1.13* இலட்சம் பேருக்கு முழு நேர வேலையும், சுமார் 35,000 பேருக்கு நூல் நூற்பதற்கான வசதிகளும் அளிக்க வகை செய்யப்பட்டது. கதர்—கிராமத் தொழில்கள் வாரியம் தனது நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக, அரசுடைமை பாங்குகளிலிருந்து கடனுதவியும் பெற்றது.




# தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவோம்!

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து செயல்படுத்தப்பட்டு வரும் அல்லது செயல்படுத்துவதற்குத் தயாராக உள்ள தொழில் அபிவிருத்தித் திட்டங்களை மறுபரிசீலனை செய்வதற்காகத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சித் துறை தொடர்ந்து விவாதங்களை நடத்தி வருகிறது. குறைந்த அளவுக்கு உற்பத்தித் திறனைப் பயன்படுத்துவது, திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள கஷ்டங்கள், சிறு மற்றும் நடுத்தரத்தொழில்களுக்கு பாங்கு உதவி, நெசவுத் தொழிலில் உள்ள குறைகளைப் போக்குவது போன்றவை மறுபரிசீலனைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கைத்தறி நெசவாளர்கள் பயனடைவதை 30 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதத்திற்கு உயர்த்துவதும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஏற்றுமதி அடிப்படையிலான தொழில் உற்பத்தி, கைத்தறி நெசவாளர்களுக்கான விற்பனைத் திட்டம், சுமார் 10 ஆயிரம் நெசவாளர்களுக்கான தீவிர அபிவிருத்தித் திட்டம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் ஆராயப்படுகிறது. சிறு தோல் பதனிடுவோர் பலர் தமிழ்நாட்டில் உள்ளதால், ஈ.ஐ. ரக பதனத் தோல் ஏற்றுமதியில் உள்ள தடைகள் பற்றியும் அரசு மறுபரிசீலனை செய்து வருகிறது. கைவினைஞர்களுக்கு கச்சாப் பொருட்கள் வழங்குவதுபற்றியும் ஆராயப்பட்டு வருகிறது.

கைவினைஞர்களுக்குக் குறித்த காலத்தில் போதுமான அளவு கச்சாப் பொருட்கள் கிடைக்க வகை செய்வதற்காகத் தொழில் வர்த்தகத்துறைகளின் மண்டல இயக்குநர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் இனி விரைவில் விண்ணப்ப நமூனைக்களைப் பரிசீலனை செய்வார்கள்.

தமிழ் நாட்டில் மின்சக்தி உற்பத்தியில் மேம்பாடு காண்பதற்காகத் தனி அக்கறை காட்டப்பட்டு வருகிறது. நாள்தோறும் 2.5—2.6 கோடி யூனிட் மின்சக்தி தேவைப்படுகிறது. இதை மாநில மின் வாரியம் தற்போது முழுமையாகச் சமாளித்து வருகிறது.

தொழில் வளர்ச்சிக்கான தலைமை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த 3 அலுவலர்கள் கொண்ட குழு ஒன்று, மாநிலத்தில் தொழில்துறை முயற்சிகள் பற்றி பொது மதிப்பீடு செய்யவும், விரைவில் திட்டங்களை செயல்படுத்தித் தேவைப்படும் நிதி உதவி அளவு பற்றித் தெரிந்து கொள்வதற்காகவும் மாநில அரசு, வர்த்தகத் தொழில்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியது.


உற்பத்தித் திறனை அதிகபட்ச அளவுக்குப் பயன்படுத்தி, தேவைப்பட்ட துறைகளில் உற்பத்தித் திறனை விரைவில் அதிகரித்துக் கொள்ளவும், இறக்குமதி ஏற்றுமதி தொழில் லைசென்சு நெறிமுறை பற்றி ஆராயவும், தொழில்நுட்பத் தகவல் அமைப்பு, புள்ளி விவர பாங்கு ஆகியவற்றை ஏற்படுத்தி மாநில அரசை வலுப்படுத்துவதில் உள்ள பிரச்னைகளை ஆராயவும், மின்சக்தி தேவை, மின்வெட்டு ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் தொழில்களுக்கு முன்னுரிமை அளிப்பது, தொழில்கள் துவங்குவதற்கான முன் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது மற்றும் குறித்த நேரத்தில் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உதவுவதைச்சிறந்த முறையில் கண்காணிக்க மத்திய—மாநில அரசு தொடர்பு முறைபற்றியும், சிறு தொழிற்சாலைகள் நடுத்தரத் தொழிற்சாலைகள் பெரிய தொழிற்சாலைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை மேலும் ஏற்படுத்துவது போன்றவைகளைத் தமிழ் நாடு மாநில அரசின் ஒத்துழைப்போடு ஆராயச் செயற் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

> ''மக்கட் தொகையை வைத்தோ, நிலப் பரப்பை வைத்தோ ஒரு நாட்டின் தரத்தை எடை போடுவதில்லை. அந்த நாட்டின் இலட்சியங்களும், கொள்கைகளும், ஆக்க முயற்சிகளும் எவ்வளவு உயர்ந்தவையாயிருக்கின்றன என்பதுதான் முக்கியம்.''
>
> —இந்திரா காந்தி

# நிழல்

பட்டுக்கோட்டை குமாரவேல்

9



**போ**னை எடுத்துப் பேசிய புண்ணியகோடி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார். காரணம் அவருக்குத் தேவையான தகவலை, சி.ஐ.டி. சிவானந்தம் போனில் தெரிவித்தார்.

சம்பந்தி கருணாகரனின் வீட்டிற்கு வந்திருக்கும் சுந்தரபாண்டியனும், கருணாகரனும் பேசிய பேச்சில் சில தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அந்தப் பேச்சை டேப் ரிகார்டரில் பதிவு செய்திருப்பதாகவும் சிவானந்தம் சொன்னார்.

சிவானந்தத்தை உடனே வரவழைத்தார்; அந்த டேப் ரிகார்டரைக் கொண்டு வரச்செய்து இயக்கினார். டேப்ரிகார்டர் பேசத் தொடங்கியது. கருணாகரனின் குரலும், சுந்தரபாண்டியன் குரலும் ஒலித்தன.

''சுந்தரபாண்டியன்! சதா நீங்கள் கண்ணீர் விடுவதால் இறந்துபோன உங்கள் மகன் திரும்பி வந்துவிடுவானா? பிறப்பைப் போலவே இறப்பும்! நடந்ததை மறந்துவிடுங்கள்.''

''என் மகனை நானே கொன்றதை எண்ணும்போது நான் வருந்தாமல் இருக்க முடியுமா கருணாகரன்!''

''என்ன? உங்கள் மகனை நீங்களே கொன்றீர்களா! எனக்கு விளங்கவில்லையே உங்கள் பேச்சு!''

''அதாவது நான் செய்த தீமைகள்-அவனைக் கொன்றுவிட்டன''.

''அப்படித் தாங்கள் நினைத்து வருந்தும் அளவுக்கு யாருக்குத் தீமை செய்தீர்கள்? யாருக்குச் செய்த தீமை உங்கள் மகனின் உயிரைக் குடித்துவிட்டது என்று எண்ணுகிறீர்கள்?''

''நான் கள்ளக் கடத்தல் செய்துவந்தபோது எனக்கு உதவி செய்து வந்த நாகசாமியின் மகன் மனோகரனை''.

''மனோகரனைக் கொலை செய்யக் காரணம்?''

''வைர வியாபாரி ஒருவனை வஞ்சகமாக அழைத்து வந்து அவனைக் குடிபோதையில் மயக்கி அவனிடமுள்ள வைரங்களை அபகரிக்க எண்ணினேன். ஆனால், குடிவெறி அவன் உயிரையே குடித்துவிட்டது. முதலில் பயந்தேன். அவன் வைத்திருந்த வைரக் கற்களை என் கைகளால் எடுத்துப் பார்த்த பிறகு, யாருக்கும் தெரியாமல் அவனை எங்காவது புதைத்துவிடத் துடித்தேன். திண்டாடினேன். மனப் பயம் என் உள்ளத்தை ஆட்கொண்டு விட்டதால் என் முகம் பேயறைந்த முகமாகிவிட்டது. உடல் நடுக்கத்தோடு உள்ளத் துடிப்போடு நின்ற என் முன்னால் நாகசாமியின் மகன் மனோகரன் வந்து நின்றான்.

''அந்த வைர வியாபாரி குடிபோதையால் சவமாகிவிட்டான் என்று தெரியாத மனோகரன், நான் விஷமிட்டுக் கொன்று விட்டதாக நினைத்து விட்டான். அவன் நினைத்ததை என்னிடமே கேட்டுவிட்டான். ''என்ன முதலாளி அவரை அநியாயமா விஷமிட்டுக் கொன்னுட்டீங்களே'' என்று என்னையே கேட்டான்.

''உடனே பயந்தவனைப் போல நடித்தேன். அணைத்துப் பேசி அவன் உதவியை நாடினேன். சவமாகக் கிடந்த வைர வியாபாரியை என் வீட்டுக் கொல்லையிலேயே புதைத்துவிட மனோகரனையே குழி வெட்டச் சொன்னேன். அவன் என் வார்த்தைகளை நம்பினான். புதைகுழியும் தோண்டினான். இருவருமாகச் சேர்ந்து அவன் தோண்டிய சவக் குழிக்குள் அந்த வைரவியாபாரியின் உடலைக் குனிந்து வைத்தோம். குழிக்குள் வைத்த வியாபாரியின் உடல் மீது மண்வெட்டியால் மண்ணைத் தள்ளிக் கொண்டிருந்தான் மனோகரன்.''

''என் முன்னால் என்னைக் குற்றவாளி என்று சொன்ன முதல் மனிதனான மனோகரன் என்றைக்காவது ஒருநாள் என்னைக் காட்டிக் கொடுத்துவிடுவான் என்று என் மனம் தீர்மானித்தது. அடுத்த விநாடியே என் மடியிலிருந்த பிச்சுவாவினால் மண்ணைக் தள்ளிக் கொண்டிருந்த மனோகரன் முதுகில் குத்தினேன். பிச்சுவாவில் தோய்ந்திருந்த விஷம் அவன் உயிரை உடனே குடித்துவிட்டது. அவன் வெட்டிய சவக் குழிக்குள் சவமாக விழுந்தான். அவன் தோண்டிய மண்ணாலேயே அவன் சடலத்தையும் மூடிவிட்டேன். இருவர் சடலங்களையும் புதைத்த இடம் தெரியாமல் இருக்க அந்த இடத்தில் இரண்டு தென்னங் கன்றுகளைப் பெயர்த்தெடுத்து நட்டு வைத்தேன். இன்று அது பெரிய மரமாகி நிற்கிறது.''

''இவ்வளவு ரகசியமாக திறமையாகச் செய்த காரியம் மனோகரனின் தந்தைக்கு எப்படித் தெரிந்தது?''

''கன்றைப் பிரிந்த தாய்ப்பசுவின் துடிப்பு அவன் தாயிடமிருந்தது. அவளின் பாசத் துடிப்பு நான்தான் குற்றவாளி என்று காட்டிக் கொடுத்துவிட்டது. என் பங்களாவிற்குச் சென்ற மனோகரன், வீடு திரும்பவில்லை என்று எனது கள்ளத்தோணியை ஓட்டும் அவள் கணவன் நாகசாமியிடம் சொன்னாள். காலைச் சுற்றின பாம்புபோல என்னைச் சுற்றிக் கொண்டிருந்தான் நாகசாமி. அந்தப் பாம்பு என்றாவது ஒருநாள் கடிக்காமல் விடாது என்று எண்ணி அவனை என் கையாட்களை விட்டு அடித்துக் காட்டுவிலங்குகளுக்கு இரையாக்கும்படி சொன்னேன். அன்று இரவு அடித்துக்காட்டில் போட்டு விட்டோம் என்றார்கள். பொழுது விடிந்து நான் போய்ப்பார்த்த பொழுது அவனது எலும்புகூடக் கிடைக்கவில்லை. அப்படி அடிபட்ட நாகசாமி, அடிபட்ட நாகமென எங்கோ மறைந்து விட்டான். என்றைக்காவது ஒரு நாள் அந்த நாகசாமி படமெடுத்த நாகமாக என்னைக் கொத்திக் கொல்வான் என்ற பயம் என் இதயத்துடிப்பை அடிக்கடி அதிகப் படுத்திக் கொண்டே இருக்கிறது. நான் அவன் மகனைக் கொன்றேன். அதனால் அவன்தான் என் மகனைக் கொன்று பழிதீர்த்துக் கொண்டிருப்பானோ என்று நினைக்கிறேன்.''

சுந்தரபாண்டியனின் மனப் போராட்டத்தையும் வாழ்க்கைச் சுமைகளையும் பதிவுசெய்யப்பட்ட டேப்பிலிருந்து கேட்டார் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி.

தன்னைப் பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டிருப்பான் என்று சுந்தரபாண்டியன் நம்பும் நாகசாமி உயிரோடு இருக்கிறானா? எங்கிருக்கிறான்? எப்படி வாழ்கிறான்? எப்படி வந்து பழிதீர்த்துக் கொண்டான்? புண்ணியகோடியின் சிந்தனைக் குதிரை மீண்டும் புலன் விசாரணை செய்யப்புறப்பட்டு விட்டது.

நாகசாமி எங்கோ மாயமானகை வேறொரு நிழலாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று பட்டது. கையிலிருந்த சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார். மறு விநாடி, தன் மேஜை டிராயரைத் திறந்தார்.

உள்ளே இருந்த மரகதம், மாரிசாமி, மேகநாதன் ஆகியோரின் புகைப்படங்களை எல்லாம் எடுத்துக் கண்ணோட்டம் விட்டார். மரகதத்தின் புகைப் படத்திற்கும், அவர் பங்களா வேலையாள் மாரிசாமியின் புகைப் படத்திற்குமுள்ள ஒற்றுமைகளைப் பார்த்த புண்ணியகோடி தன் பையிலிருந்த பேனாவை எடுத்து மாரிசாமியின் உருவத்தைப் பெண்ணுருவமாக்கிப் பார்த்தார். ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்த புண்ணியகோடி சப்-இன்ஸ்பெக்டர் ரவியை அழைத்து அந்தப் படத்தைக் காட்டினார்.

சப்-இன்ஸ்பெக்டர் ரவிக்கு ஒரே குழப்பம். மேகநாதன்

## அயல்நாடுகளுக்கு ஆயத்த ஆட்டுத்தோல்!

இந்தியாவிலிருந்து சோவியத் நாடு ஆண்டுதோறும் 8 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆட்டுத் தோலை இறக்குமதி செய்கிறது. இந்தியாவிலிருந்து அதிகப்படியான ஆட்டுத் தோலை இறக்குமதி செய்யும் நாடு சோவியத் நாடுதான்.

வட ஆர்க்காடு மாவட்டம் ஆம்பூர் அருகே சோலூரில், ஆட்டுத் தோலைப் பதப்படுத்தி ஆயத்த நிலையில் தருகிற தனியார் தோல் நிறுவனத் தொடக்க விழா ஒன்றில் கலந்து கொண்ட சோவியத் நாட்டுத் தோல் நிறுவன அமைப்பைச் சேர்ந்த 'விக்டர் மிச்சிலோவிச் இவானோவ்' இத்தகவலைக் கூறினார்.

சோலூரில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இப்புதிய நிறுவனத்திற்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ரூ. 30 இலட்சம் முதலீடு செய்துள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 60 புதிய தொழில்களுக்கு முதலீடு வழங்கியுள்ளது.

பங்களாவில் நடக்கும் கொலைகளை மாரிசாமி மரகதமாகிக் கொலை செய்திருக்க வேண்டும். அல்லது மேகநாதனும், அவன் தாய் மங்களமும் கொடுத்த வாக்கு மூலப்படி மரகதம் கொலை செய்வதைக் கலையாக நினைத்து இத்தனை கொலைகளையும் செய்து வந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். கொலைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்க பலத்த கண்காணிப்புடன் அதே பங்களாவில் ஒரு புது மணத்தம்பதிகளுக்கு வரவேற்பும் முதலிரவும் நடந்தது. அன்றைய தினம் எந்தக் குற்றமும் நடக்கவில்லை. எந்தக் கொலை முயற்சியும், நடக்கவில்லை. புண்ணியகோடிக்கும் ரவிக்கும் மீண்டும் குழப்பமாக இருந்தது. அதனால் மறுநாள் சந்தித்துப் பேசுவதாக முடிவு செய்து பிரிந்தனர்;

* * *

**மா**ரிசாமி யார்? அவன் சொந்த ஊர் எது? அவன் உற்றார் உறவினர் யார்? மனைவி மக்கள் எங்கே? மீண்டும் புண்ணியகோடி புலன் விசாரணையில் இறங்கினார்.

தான் யூகித்து வைத்ததை சப்-இன்ஸ்பெக்டர் ரவியிடம் சொல்லத் தொடங்கினார் புண்ணியகோடி.

மரகதத்தின் மீது மேகநாதனும், அவர் தாய் மங்களமும் பழி சுமத்தி அவளுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்து அவளை ஒழித்துக் கட்டத் திட்டமிடுகிறார்கள். காரணம் மரகதத்திற்கு அவள் தந்தை எழுதி வைத்திருக்கும் உயில்தான். மரகதத்தைப் பகடைக்காயாக்கி இருவரும் இஷ்டம்போல ஆட்டிப் படைத்து அனுபவிக்க நினைத்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை. தன் நிலை உணர்ந்த மரகதம் அவள் தந்தைக்கு உதவியாக இருந்த மாரிசாமியோடு எச்சரிக்கையாக இருந்துவிட்டாள்.

மாரிசாமிக்கு வயதாகி விட்டாலும் பலமுள்ள முரடன்; உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கும் நல்ல பண்புள்ளவன். தந்தையாக, தாயாக, ஆசானாக, தோழனாக, நன்றியுள்ள வேலைக்காரனாக இருந்து மரகதத்தைக் காத்து வருபவன். மரகதத்தைக் கொன்றுவிட்டால் அத்தனை சொத்துக்களும் தனதாகிவிடும், மறுமணம் செய்து மகிழ்ச்சியாக வாழலாம் என்று எத்தனையோ தடவைகளில் மரகதத்தைக் கணவன் மேகநாதனும், அவன் தாய் அதாவது மரகதத்தின் அத்தை மங்களமும் விஷமிட்டுக் கொன்றுவிட முயற்சித்தார்கள். எதிரிகளை உண்டாக்கினர்.

நன்றியுள்ள நாயாக அந்த பங்களாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாரிசாமியின் மனம் அவர்களைப் பார்த்துக் குமுறிக் கொந்தளித்தது. பொங்கி எழும் கடல் அலையும், மரங்களை அடித்து வரும் வெள்ளமும் ஊரையே அழித்து விடுவது போல, மங்களமும் மேகநாதனும் போடும் திட்டங்கள் மரகதத்தின் வாழ்வை மட்டுமல்ல, உயிரையே குடித்து விடும் என்று நினைத்துத் தவித்தான். மரகதத்தின் நிழலாக நின்று அவள் உயிரை, உடைமைகளை, உரிமைகளைக் காத்தான் மாரிசாமி. அவன் தவிப்பையும் அவனது மனக்குமுறலையும், அவனது முகமாற்றத்தையும் கண்ட மரகதம் காரணம் கேட்டாள்.

குற்றவாளிகளைக் காட்டிக் கொடுக்கும் துப்பறியும் நாய் போல அந்த பங்களாவில் மங்களமும் மேகநாதனும் போடும் திட்டங்களையும், நடத்தும் கூத்துக்களையும், அடிக்கும் கொள்ளைகளையும் மரகதத்திற்குக் கையும் களவுமாகக் காட்டிக் கொடுத்தான். மரகதம் குமுறும் எரிமலையாகி விட்டாள். தொட்டால் சுடும் நீறு பூத்த நெருப்பானாள்.

கணவனுக்கு அடங்கிய மனைவியாக, குடும்பக் கட்டுப்பாட்டிற்குள் வாழும் பண்புள்ள பெண்ணாக வாழ நினைத்த மரகதத்தை அவர்கள் இருவருடைய செயல் சர்வாதிகாரியாக்கி விட்டது. கல்மனம் கொண்டு அவர்கள் இருவரையும் உண்டு உறங்கும் ஜடமாக ஆக்கிவிட்டாள்.

உல்லாசப் பறவையாக வாழ முடியாத மேகநாதனும், அதிகாரமும் அட்டகாசமும் செய்ய முடியாமல் கட்டுப் பெட்டியாகி விட்ட மங்களமும் சந்தர்ப்பவாதிகளாக நம்மிடம் வந்து மரகதத்தைப் பற்றிக் குற்றம் சொல்கிறார்கள் என்று புண்ணியகோடி விளக்கமாகச் சொன்னார்.

மேகநாதன் குடும்பத்தைப் பற்றி இன்ஸ்பெக்டர் புண்ணியகோடிக்கு இவ்வளவு தெரியும் என்று ரவி எதிர்பார்க்கவில்லை.

''ஆவி, உலகம், பேய், பிசாசு இரத்தக் காட்டேரி என்று சொல்வதெல்லாம் உலக வாழ்வில் உண்மைதானா'' என்று புண்ணியகோடியிடம் கேட்டார் ரவி.

''எல்லாம் பொய்! பாமரர்களையும், உழைப்பாளிகளையும் ஏமாற்ற உயர்ந்தவர்களும், சோம்பேறிகளும் செய்து வைத்த சதி.''

''மேகநாதனின் பங்களாவில் நடந்த கொலைகளை யார் செய்தார்கள்? விநாயகத்தைக் கொலை செய்தது யார்!'' சப்-இன்ஸ்பெக்டர் ரவி கேட்டார்.

''நாளை என் முடிவைத் தங்களுக்குப் போனில் சொல்லுகிறேன். அதன்படி முடிவு செய்யுங்கள்'' என்றார் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி. சப்-இன்ஸ்பெக்டர் ரவியும் விடைபெற்றுக் கொண்டார்.

மறு நாள் பொழுது விடிந்ததும் டெலிபோன் ஒலித்தது. ரவி ரிசீவரைக் கையில் எடுத்தார்.

''இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி பேசுகிறேன். மரகதத்தை உடனே கைது செய்துவரப் புறப்படுங்கள். நானும் அங்கு வந்து கொண்டிருக்கிறேன்.''

''உத்தரவு. இப்பொழுதே புறப்படுகிறேன்.'' ரிசீவரைக் கீழே வைத்த ரவி, ஜீப்பில் சில காவலர்களுடன் புறப்பட்டார்.

கோவையில் இருந்து புறப்பட்ட போலீஸ் ஜீப் ஊட்டியிலுள்ள மரகதத்தம்மாளின் வீட்டில் போய் நின்றது.

ஜீப்பிலிருந்து இறங்கிய ரவி மரகதம் பங்களாவின் கதவில் இருந்த விசைப் பொத்தானை அழுத்தினார்.

மரகதம் கதவைத் திறந்தாள்.

''விநாயகத்தைக் கொலை செய்த குற்றத்திற்காக குற்ற இலாகா உங்களைக் கைது செய்ய உத்தரவிட்டிருக்கிறது. நான் உங்களைக் கைது செய்கிறேன்'' என்று சொல்லி முடிப்பதற்குள் மரகதத்தின் நிழலாக அவளைப் போன்ற மறு உருவம் அவள் பின்னால் வந்து நின்றது.

சப்-இன்ஸ்பெக்டர் ரவி திகைத்தார்.

ரவியின் திகைப்பைப் பார்த்து மரகதம் பின்னால் திரும்பினாள். திகைத்தாள், திடுக்கிட்டாள். தன் உருவத்தைக் கண்ணாடியில் பார்ப்பது போலத் தன் எதிரே நின்ற உருவத்தைப் பார்த்தாள். மரகதத்திற்கு உலகமே சுற்றுவது போலத் தெரிந்தது. எதிரே நின்ற உருவத்தைப் பார்த்த

கண்கள் அப்படியே மூடிக் கொண்டன. மயங்கி விழுந்தாள் மரகதம்.

''சப்-இன்ஸ்பெக்டர் ரவியின் மூளை குழம்பியது. தெளிவடைய முடியாமல் திகைக்கும்போது இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி யின் 'ஜீப்' மரகதத்தின் பங்களா வின் முன்னல் வந்து நின்றது.

''நான்தான் மரகதம்! என்னைக் கைது செய்யுங்கள்'' என்றது மரகதத்தின் மறு உருவம்.

யார் உண்மையான மரகதம்? மயங்கி விழுந்தவளா அல்லது எதிரே நிற்பவளா? என்று ரவி திகைத்து நின்று, இன்ஸ்பெக்டர் புண்ணிய கோடியைப் பார்த் தார்.

மயங்கி விழுந்து கிடந்த மரக தத்தின் முகத்தில் தண்ணீர் தெளிக்கச்சொல்லிவிட்டு அவளைப் போன்று நிழலுருவாக நிற்கும் மரகதத்தைக் கைது செய்யச் சொன்னர் புண்ணியகோடி.

''யார் நீ?'' என்று துப்பாக் கியை அவள் முன் நீட்டினர் புண்ணியகோடி.

மரகதத்தின் நிழலாக மாய மாய் மரகதமாய் நின்ற உருவம் தன் வேஷத்தைக் கலைத்தது.

இன்ஸ்பெக்டர் புண்ணிய கோடியும், சப்-இன்ஸ்பெக்டர் ரவியும் திகைத்தார்கள். அவர்கள் எதிரே நின்றது மரகதத்தின் வேலையாள் மாரிசாமி.

''மாரிசாமி, நீயா!''

''நான் மாரிசாமி அல்ல. என் உண்மைப் பெயர் நாகசாமி. வேதாரண்யம் சுந்தர பாண்டி யன் மகன் விநாயகத்தை நான் தான் கொலை செய்தேன். என் ஒரே மகன் மனேகரனின் உயிரைக் குடித்த சுந்தர பாண்டி யனுடைய மகன் விநாயகத்தின் உயிரைக் குடித்துப் பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டேன்,''

''நீதான் உண்மையான நாக சாமி என்பதற்கு என்ன ஆதாரம்?''

''இதோ! என் பெயர்'' என்று, இடது கையை நீட்டினன் நாக சாமி. நாகசாமி என்ற பெயர் பச்சை குத்தப்பட்டிருந்தது.''

''நாகசாமியான நீதான் மாரிசாமியாக மரகதம் வீட்டில் இருக்கிறய் என்று சுந்தர பாண் டியனுக்கும், மேகநாதனின் நண்பர் கருணகரனுக்கும் தெரி யுமா?''

''தெரியாது''

''என் மகன் மனேகரன் எங்கே? நீதான் அவனைக் கொன்று விட்டாய் என்று நான் சுந்தர பாண்டியன் வீட்டில் சென்று கூச்சலிட்டுக் குற்றம் சாட்டிக் கூட்டத்தைக் கூட்டி னேன். அன்று இரவே என்னை அவர் தன் வேலையாட்களிடம் சொல்லி அடித்துக் கொன்று விடச் சொன்னர்.

''காணமல் போன என் மகன் மனேகரனைக் காட்டுவதாக வேதாரண்யம் காட்டிற்குள் அழைத்துப் போனர்கள். பெற்ற பிள்ளையின் பாசத்தால் அவர் களைப் பின் தொடர்ந்து சென் றேன். காட்டுக்குள் இருக்கும் காளிகோவிலுக்குள் என் மகன் இருக்கிறன் என்று உள்ளே நுழைந்தேன். காளிக்கு என்னையே பலியிடப் போவதாக என்னைச் சுற்றிக் கொண்டார்கள் தப்பி ஓடினேன். துரத்தித் துரத்தி அடித்தார்கள். வெட்டி னர்கள், ஈட்டிகளால் குத்தி னர்கள். ரத்த வெள்ளத்தில் மிதந்த நான் மூர்ச்சையானேன். — என் உடலிலிருந்து உயிர் பிரிந்து விட்டதாக நினைத்துக் காட்டு மிருகங்களுக்கு இரையாகட்டும் என்று போட்டுவிட்டு ஓடிவிட் டார்கள்.

## தமிழ்நாட்டில் 16 புதிய கம்பெனிகள்!

தமிழ்நாட்டில் பிப்ரவரி மாதத்தில் 10 கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத் தொகை கொண்ட அரசுக் கம்பெனி ஒன்றும், 73 இலட் சம் ரூபாய் மொத்த அங்கீ கரிக்கப்பட்ட மூலதனத் தொகை கொண்ட 15 தனி யார் கம்பெனிகளும் பதிவு செய்யப்பட்டன.

பிப்ரவரி மாதத்தில் தவ றிழைத்த கம்பெனிகள், கம் பெனி அதிகாரிகளுக்கு எதி ராக 130 வழக்குகள் தொடுக் கப்பட்டன. வழக்குகளில் சம்பந்தப்பட்ட கம்பெனிகள், கம்பெனி அதிகாரிகளுக்கு மொத்தம் 12,975 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு 82 வழக்குகள் முடிவு செய்யப் பட்டன.

''பொழுது விடிந்தது. என் உடம்பிலிருந்து பிரிந்துவிட இருந்த உயிரும் பிழைத்தது. பகல் முழுவதும் மறைந்து இருந்து, இரவு வந்ததும் இரயில் ஏறிக் கோவைக்கு வந்துவிட் டேன்.

''சிகிச்சைக்காக மருத்துவ மனைக்குச் சென்றபோது மரக தத்தின் தந்தை மருதநாயகத் தைச் சந்தித்தேன். என் நிலை கண்டு கலங்கினர். இந்த நிலைக் கான காரணம் கேட்டார். என்னை மறைத்துக் கொள்ள நடந்ததை மனத்திற்குள் ஆழப்புதைத்து விட்டு 'நான் யாருமற்ற அனதை; டிக்கெட் பரிசோதகரிடம் இருந்து தப்பிக்க, ஓடும் இரயிலிலிருந்து அடுத்த பெட்டிக்குத் தாவினேன்; தவறி விழுந்து விட்டேன்' என்று சொன்னேன். என் பெயரையே மாரிசாமி என மாற்றியும் சொன் னேன்.

''அவர் நல்லவர். என் சொல்லை நம்பினர். என் தந்தையாக, தாயாக, நண்பனக அவர் வீட் டிற்கு அழைத்துப்போய் சிகிச்சை யளித்தார். உடல் நலமான நான் அங்கேயே தங்கிவிட்டேன். அப்போது மரகதம் சிறு குழந்தை தாயில்லாத பிள்ளை. மனைவி இறந்த அதிர்ச்சியால் மரகதத் தின் தந்தையும் இறந்துவிட்டார். மங்களத்தம்மாள் தாயாக நடிக்க வந்தாள். நான் மரக தத்தை உயிராக நினைத்து அவள் நிழலாகத் துணையிருந்தேன்.''

''நீ கோவைக்கு வந்த பிறகு சுந்தரபாண்டியனைச் சந்திக்கவே இல்லையா?''

''நான் அவரைக் கோவையில் சந்தித்த பிறகு தான் விநாயகத் தைக் கொன்று பழிக்குப் பழி தீர்த்துக் கொள்ளத் திட்டமிட் டேன். சுந்தரபாண்டியனின் நண்பர் கருணகரன், கோவைத் தொழிலதிபர் என்று தெரிந்த நான், குறுகிய காலத்தில் பணம் சேர்க்கத் துடித்துக் கொண் டிருந்த மேகநாதனைப் பயன் படுத்தினேன். கருணகரனை நண்பனக்கிக் கொள்ளச் சொன் னேன். இருவரும் நண்பர்க ளானோர்கள்.



## வேலைவாய்ப்புக் குறித்துத் தகவல் அளிக்கும் வார ஏடு!

நாட்டில் வேலைவாய்ப்பு பற்றிய எல்லாத் தகவல்களையும் எடுத்துக் கூறும் விதத்தில் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் விளம்பரக்காட்சிப் பிரச்சாரப் பிரிவு ஏப்ரல் 3-ஆம் தேதி முதல், வார மலர் ஒன்றை ஆங்கிலத்திலும் இந்தியிலும் வெளியிடும்.

மத்திய அரசு, அரசுத் துறை நிறுவனங்கள், சுய சேவைக்கார்ப்பொரேஷன்கள் போன்றவற்றில் உள்ள காலிப்பதவி இடங்கள் பற்றிய எல்லாத் தகவல்களையும் இந்த ஏட்டிலும் காணலாம்.

மத்திய அரசு ஊழியர் தேர்வுக் கமிஷன், மத்திய வேலை தேடி தரும் அலுவலகம் ஆகியவை தெரிவிக்கும் எல்லாக் காலி இடங்கள் பற்றிய தகவல்களையும இந்த வார ஏட்டில் பார்க்கலாம்.

---

''சுந்தரபாண்டியனும், கருணாகரனும் சம்பந்தியாகப் போகும் செய்தி, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது எனக்கு.

''திருமண ஊர்வலத்தில் சுந்தரபாண்டியன் மகன் விநாயகத்தைக் கொல்ல வெடிவைத்தேன். தப்பித்துக் கொண்டான் விநாயகம். அதன்பிறகுதான் முதலிரவன்று நான் ஆசைதீர விநாயகத்தைக் கொன்று பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டேன்'' என்று ஆவேசமாகச் சொன்னான் நாகசாமி.

''அப்படியென்றால் இதற்கு முன் இங்கு நடந்த கொலைகளும், விநாயகம் கொலை நடந்த பிறகு செய்த கொலை முயற்சிகளும்.....

''நான் செய்ததல்ல....கொலை செய்தவர் யார், எதற்காகக் கொலை செய்கிறார்கள் என்று நான் ஒருநாள்கூடக் கவலைப் பட்டதில்லை.

''அப்படியென்றால் நீ மேகநாதனின் மனைவி மரகதம்போல் வேஷமிடக் காரணம்?'' இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி கேட்டார்.

''சுந்தரபாண்டியன் மகன் விநாயகத்தை நானே கொலை செய்ய வேண்டும். என் மகனைப் போல அவன் மகனும் இமைப்பொழுதில் உயிர் விட வேண்டும் என்று எண்ணினேன். துப்பறியும் கதைகள் பலபடித்துத் திட்டமிட்டேன். பட்டப் படிப்பு படித்த மரகதத்தம்மாளும் பத்திரிகைகளில் வரும் திடுக்கிடும் கொலை, கொள்ளைகளைப் பற்றிப் படித்துச்சொல்வார்கள். ஆண்கள் பெண்ணுருவில் செய்து வரும் கொலைகளைப் பற்றி நானே படித்தேன். மரகதத்தம்மாளின் ஆடைகளை நானே உடுத்திக் கொண்டு கண்ணாடி முன் ஒரு நாள் நின்றேன். மரகதத்தம்மாளே என் எதிரே நின்றார்கள். திகைத்தேன். திட்டமிட்டேன். விநாயகத்தின் முதலிரவன்று இதே உடையில் சென்று, கொன்று வெற்றி கண்டேன்.''

''நீ இரண்டாவதாகச் செய்த கொலை முயற்சிக்குக் காரணம்?'' இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி கேட்டார்.

''மது, மங்கை, கொலை, கொள்ளை இவ்வகைளில் பழக்கமாகிவிட்ட மனித மனம், சந்தர்ப்பங்கள் சுலபமாகக் கிடைக்கும் போது சும்மா இருக்குமா? தீமைகளை நினைத்து நினைத்துத் திட்டமிட்டு வந்த நான் தீயவனாகவே மாறிவிட்டேன். இதே உடையில் விநாயகத்தைக் கொன்று வெற்றி கண்ட என் கைகள் அடுத்து வந்த திருமணத் தம்பதிகளைக் கொல்லத் துடித்தன. திட்டமிட்டேன். ஆனால் அந்தத் திருமணக் கோஷ்டி சப்-இன்ஸ்பெக்டர் ரவி திட்டமிட்டுத் தயாரித்தது என்று எனக்குத் தெரியாது. எச்சரிக்கையாக இருந்து சப்-இன்ஸ்பெக்டர் என்னைப் பிடித்துவிடப் போராடினார். அவருடன் போராடித் தப்பித்து விட்டேன். மரகதத் தம்மாளை விட்டு ஏன் அந்த ஊரை விட்டே ஓடிவிடத் திட்டமிட்டேன்.

''மரகதத்தம்மாளின் உடையில் என்னைப் பார்த்து விட்ட சப் இன்ஸ்பெக்டர் மரகதம்தான் குற்றவாளி, கொலைகாரி என்று உங்களிடம் வலியுறுத்தி வந்தார். பழி ஒருபுறம் பாவம் ஒருபுறம் நேரிட்டுவிடக் கூடாதே என்று நீங்கள் அவர்களைக் கைது செய்ய வரும் நாளை எதிர்பார்த்து அவர்கள் நிழலாக இருந்தேன். இத்தனை நாட்கள் எதிர்பார்த்து என் கடமையை முடித்துவிட்டேன்.

''நான் இத்தனை ஆண்டுகள் பொறுத்திருந்த காரியமும் முடிந்துவிட்டது. என் ஆன்மா இனிமேல் நிம்மதியடையும். என்னைக் கைது செய்யுங்கள்'' என்று கைகளை நீட்டினான் நாகசாமி.''

சப்-இன்ஸ்பெக்டர் ரவி நாகசாமியின் கையில் விலங்கைப் பூட்டினார்.

''தன் மகன் மனோகரனை சுந்தரபாண்டியன் கொன்று விட்டார் என்ற காரணத்திற்காகக் கொலை செய்யப்பட்ட மனோகரனின் தந்தை நாகசாமி பல வருடங்கள் காத்திருந்து சுந்தரபாண்டியன் மகன் விநாயகத்தைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டான். மேகநாதன் வீட்டில் மாரிசாமியாக வாழ்ந்து வந்த நாகசாமியை இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி கைது செய்தார்'' என்று வந்த பத்திரிகைச் செய்தியைப் படித்தார் கருணாகரன்.

''அடப்பாவி மேகநாதன் வீட்டில் இருந்த மாரிசாமிதான் நாகசாமியா?'' என்று கருணாகரன் அதிர்ச்சியடைந்தார்.

''பாவி அவனல்ல கருணாகரன். நான்தான். நான் செய்த குற்றங்கள் என் நிழலாகத் தொடர்ந்து என் மகன் விநாயகத்தின் உயிரைக் குடித்துவிட்டது'' என்றார் சுந்தரபாண்டியன்.

''உண்மைதான் தீ வீட்டை மட்டும் எரித்துவிடும்; தீமை அதைச் செய்தவனையும் அழித்து விடும்! தீயை யார் வேண்டுமானாலும் அழிக்கலாம். தீமையை அவனே அழித்துக் கொள்ள வேண்டும்'' என்று கருணாகரன் சொல்லி முடிப்பதற்குள், இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி காவலர்களுடன் ஜீப்பில் வந்து இறங்கினார். அவரை வரவேற்கக் கருணாகரன் எழுந்து நின்றார்.

''மிஸ்டர் சுந்தரபாண்டியன் உங்களைக் கைது செய்ய வந்திருக்கிறேன். நாகசாமியின் மகன் மனோகரனைக் கொன்றது நீங்கள்தான் என்று மிஸ்டர் கருணாகரனிடமே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இதோ தங்கள் பேச்சுப் பதிவு செய்யப்பட்ட டேப்'' என்று கைவிலங்கோடு அருகில் வந்தார் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி.

புண்ணியகோடியை வரவேற்க எழுந்த சுந்தரபாண்டியன் கருணாகரனைப் பார்த்தபடி சவமாக நாற்காலியில் விழுந்துவிட்டார். ஆமாம், அவர் செய்த தீமை அவர் நிழலாகத் தொடர்ந்து அவர் உயிரையும் குடித்து விட்டது.

**-முற்றும்-**



# உன்னையே நீ உணர உதவிடும் உயிர்வேதியல்!

''உயிர் வேதியல் என்றால் என்ன ?''

இந்த வினாவுக்குரிய விடையையும், விளக்கத்தையும் சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் நடந்த 'உயிர்வேதியல் கண்காட்சி'யில் (Biochemistry Exhibition) பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

''வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகிப் பரந்த உலகத்தில் வாழும் இனங்களின் உயிர்காக்கும் அறிவியல் தானுமாகிச் சிறந்தது உயிர் வேதியலே!''

என்னும் வாசகத்தைப் படித்துவிட்டு மேலும் செல்கிறோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் உயிர்வேதியல் துறையில் எம். எஸ்சி, பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணவ, மாணவியரின் கைவண்ணமே கண்காட்சி முழுவதும் பளிச்சிடுவதைப் பார்க்கிறோம்.

மனித இனத்திற்கு உயிர் வேதியலாரின் பணி என்ன என்பதை விளக்கிடும் வகையில் அமைந்துள்ள இந்த அரிய கண்காட்சி உயிர் வேதியல் உயிரினங்களில் நடைபெறும் பல்வேறு வேதியல் வினைகளை எடுத்துக்காட்டி உயிரினங்கள் உருவாவது எப்படி? வளருவது எப்படி? இனப் பெருக்கமாவது எப்படி? நடத்தையில் ஏற்படும் மாறுதல்கள் என்ன? என்பன போன்றவற்றை விளக்கி நம்மையெல்லாம் வியக்க வைக்கின்றது.

மார்ச் 9-ஆம் தேதி மாலை தொடங்கி இரு நாட்கள் நடந்த இக் கண்காட்சியில் எட்டு வகையான பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும் மனித உடல் பற்றிய ஒரு கதை சொல்லும் வண்ணம் அமைந்திருந்தது. ஆடவர், மகளிர், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் கண்காட்சிக்கு வந்து அறிவியல் விருந்து பெற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அவர்களோடு முதற் பிரிவுக்குச் செல்கிறோம். அங்கே நாம் அறிந்து கொள்வதென்ன?

ஆயிரத்தில் ஒரு குழந்தை பிறவியிலேயே குறைவுடன்தான் பிறக்கின்றது. இந்த குறை-தாய்ப் பாலிலுள்ள ஏனைய சத்துக்களைச் செரிக்க இயலாத்தன்மையாகவும் இருக்கலாம்.

உதாரணமாக, பாலில் இருவித சர்க்கரை இருக்கின்றது. ஒன்று 'குளுகோஸ்' மற்றது 'கேளக்டோஸ்'. 'கேளக்டோஸ்' சர்க்கரைப் பொருள் 'குளுகோஸாக' மாறுகிறது. இந்த மாற்றுத்தன்மையில் ஒரு குறை ஏற்படலாம். இதனால் பாலிலுள்ள 'கேளக்டோஸ்' சர்க்கரைப் பொருள் இரத்தத்தின் வழியாக மூளைக்குச் சென்று, அங்கு தங்கி திடத்தன்மையை அடைகின்றது. இதனால் குழந்தையின் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டு பைத்தியம்போல் ஆகிவிடுகின்றது; சிலசமயங்களில் கண்களில் தேங்கி பார்வையைப் பாதிக்கலாம்; அல்லது ஈரலில் தேங்கி அதையும் பாதிக்கலாம். இதுபோன்ற குழந்தைகள் பைத்தியமாகி, குருடாகி கடைசியில் இறக்கவும் நேரிடலாம். இந்த அவல நிலையைத் தடுக்க இயலுமா? இயலும்!

குழந்தை பிறந்த 15 நாட்களில் இக்குறையை சிறுநீர்ப் பரிசோதனையின் மூலம் கண்டறிந்தால், 'கேளக்டோஸ்' நீக்கப்பட்ட உணவுகளைக் கொடுத்து குழந்தைகளுக்கு நல்வாழ்வு கொடுக்கலாம்.

'பிறந்த குழந்தையின் ஜாதகத்தைக் கணிப்பதைவிட அதன் உடல் நிலையைப் பரிசோதிப்பது தான் நம்முடைய முதல் வேலையாக இருக்க வேண்டும்!' என்கிறார் ஒரு உயிர்வேதியல் பேராசிரியர் சிரித்துக் கொண்டே.

நோய்நொடிக்கு முதல் காரணமே சரியான உணவு இல்லாததுதான். இதை இரண்டாவது பிரிவில் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம்.

பெரும்பான்மையான குழந்தைகள் குறைபாடின்றி பிறக்கின்றன. ஆனால், ஏழ்மையும் அறியாமையும் அவர்களைச் சரியாக வாழ விடுவதில்லை. காரணம் சத்துணவுப் பற்றாக்குறை! முக்கியமாகப் புரதப் பற்றாக்குறை, நம் நாட்டில் ஐந்து விழுக்காடு குழந்தைகளைப் பாதிக்கின்றது. 'க்வாஷியோக்கர்' என்று சொல்லப்படுகின்ற ஒரு மந்த நிலையையும், சரியான வளர்ச்சியற்ற உடலையும் உண்டாக்குகின்றது. சத்துணவுகளிலே ஒரு எளிய சத்துணவு ஒன்று உள்ளது. அதுதான் எங்கும் கிடைக்கும் பொட்டுக் கடலை!

ஒரு சில கொழுப்புப் பொருள்களை நாம் நல்ல உணவாகக் கொள்ள முடியாது. ஏன்? அவைகள் சரும நோயினை உண்டாக்குவதேன்? இதனை விளக்கும் குறிப்புகளும், படங்களும் காட்சியில் உள்ளன.

'வைட்டமின்' சத்துக்கள் எந்தெந்தப் பொருள்களில் உள்ளன? அவை குறைவதால் ஏற்படும் குறைபாடுகள் என்ன? என்பன போன்ற விவரங்களையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

நியாசின் என்ற வைட்டமினும் அதனை உண்டாக்கும் டிரிப்



வேதியல் சம்பந்தமாக விளக்கப்படுகிறது.

டோபேன் என்ற அமினோ அமிலமும் எவ்வாறு மூளையைப் பாதிக்கின்றன; இன்னும் பல தொல்லைகளை எவ்வாறு உண்டாக்குகின்றன என்பதையும் சென்னைப் பல்கலைக் கழக உயிர்வேதியல் துறையில் 1950-1962 வரை நடைபெற்ற ஆராய்ச்சி சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

தாதுப் பொருள்களான கால்சியம், பாஸ்பரஸ், சோடியம், அயச்சத்து - முதலானவைகளால் என்ன நன்மை என்பதையும், அவை குறைவதால் என்ன தீமை என்பதையும் காட்சியிலுள்ள படங்கள் விளக்குகின்றன.

வெள்ளைப்பூண்டு சாப்பிட்டால் இரத்த அழுத்த நோய்க்கு நல்லது என்று சிலர் சாப்பிடுவதைப் பார்த்திருக்கிறோம். இதேபோல் பீட்ரூட் (அது சிவப்பாயிருப்பதால்) இரத்த வளத்துக்கு நல்லது என்று அதை அதிகமாகச் சாப்பிடுவார்கள். இதெல்லாம் மூடநம்பிக்கை என்கிறது ஒரு அறிவிப்புப் பலகை.

மனித உடலின் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் அடிப்படை காரணமாய் இருப்பது சத்துணவேயாகும். பால், முட்டை, மீன், இறைச்சி இந்த நான்கு வகை உணவில் எல்லாவித வைட்டமின்களும் நிறைந்துள்ளன. எனவே, இவற்றை உட்கொள்வது மிகவும் நல்லது என்ற செய்தியையும் நாம் இங்கே தெரிந்து கொள்கிறோம்.

இன்று எங்கணும் மருத்துவ மனைகள் உள்ளன. மருத்துவ வசதிகளுக்கும் குறைவில்லை. இவ்வாறு வாய்ப்பும் வசதியும் உள்ள இந்நாளில் நாம் மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டால் என்ன?

சிறுநீர், மலம், சளி, இரத்தம் முதலானவற்றைப் பரிசோதிப்பதன் மூலம் நம் உடலில் உள்ள குறைபாடுகளைத் தெரிந்து கொள்ளவும்-பிறகு அதனைச் சரி செய்து கொள்ளவும்-சுருக்கமாகச் சொன்னால் மரணத்திலிருந்து விடுபடவும் முடியும் அல்லவா?

நீரிழிவு நோய்


இது மனிதனை சீரழிவுக்குக் கொண்டுபோகும் நோய்களிலே ஒன்று. இந்தச் சீரழிவிலே இருந்து விடுபட சோதனை முறைகளால் சிறுநீரிலுள்ள சர்க்கரையைச் சுலபத்தில் கண்டறியலாம்.

இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடலாம். 1898-ஆம் ஆண்டு பாரீஸ் நகரம் முற்றுகையிடப்பட்டபோது, நகருக்கு உணவு விநியோகம் தடைப்பட்டது. இதனால் அளவான உணவே அனைவருக்கும் கிடைத்தது. அதுபோது டாக்டர் பச்சார்ட் என்பவர் அனைவரின் சிறுநீரையும் சோதித்தார். என்ன விந்தை! நீரிழிவு நோயுள்ள சிலரின் சிறுநீரில்கூட, சர்க்கரைக் காணப்படவில்லை! இதற்குப் பிறகே 'உணவைக் கட்டுப்படுத்தினால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம்' என்பதனை உலகிற்கு முதல் முதலில் அறிவித்தார் டாக்டர் பச்சார்ட்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவை நிர்ணயிப்பது இன்சுலின் என்ற கணைய நீராகும். கணையம் பாதிக்கப்பட்டால் இன்சுலின் அளவு குறைந்து நீரிழிவு நோய் ஏற்படுகின்றது; இதனால் மற்ற நோய்களும் நீரிழிவு நோயினரை எளிதில் ஆட்கொள்ளும். உணவை கட்டுப்படுத்துதல், இன்சுலினைச் செலுத்துதல் ஏனைய நிவாரண முறைகளினால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம்.

உடலுக்குத் தேவையான அளவுதான் உணவு உட்கொள்ள வேண்டும். சாதாரண வீட்டு வேலையைச் செய்பவர்களைவிட அதிக உடலுழைப்பைச் செய்கின்ற உதாரணமாக-கல்லுடைப்பவர்கள் கட்டாயமாக அதிகம் சாப்பிட வேண்டும். எனவே,

இரத்தப் பரிசோதனை இங்கே நடந்தது.



நமது உணவு நமக்குத் தேவையான சக்தியைக் கொடுப்பதாக இருக்கவும் அதிக உணவையோ அல்லது அதிக சக்தியைத்தரும உணவையோ அதிக அளவில் சாப்பிட்டால் உடல் பருமனாவதற்கு ஏதுவாகிறது. பருமனான உடம்பு பலவிதத் தொல்லைகளைக் கொடுக்கும். குறிப்பாக, வயதான காலத்தில் இரத்தத்தில் அதிகக் கொழுப்புகள் கலக்கும். இதனால் தமனிகளின் சுவர்கள் தடித்து உட்பரப்பு குறுகும். ஆகவே, இரத்த அழுத்தம் ஏற்படும். பின் தமனிகள் சிதைவடைந்து, இரத்த உறைவினால் ஏற்படும் தடங்கல் காரணமாக இரத்தச் சுவர்கள் வெடித்து அழிவிற்குக் காரணமாகின்றது.

கொழுப்பு அதிகரிக்கின்ற நிலையிலும், வயது அதிகரிக்கின்ற நிலையிலும் ஏற்படுகின்ற தமனி சிதைவினைச் சோதனைப் பிராணிகள் மூலம் கண்டறிகின்ற ஆராய்ச்சியில் உயிர்வேதியல் துறை ஈடுபட்டுள்ளது.

கண்காட்சியின் ஒவ்வொரு பகுதியும் நம்மைக் கவர்ந்திழுக்கின்றனவே அதற்குக் காரணம் என்ன? எல்லாம் நம்மைப் பற்றி என்பதாலா?

நான்காவது பிரிவை நோக்கி நம்கால்கள் நடக்கின்றன. அங்கே நாம் காண்பது-கல்லீரல்!

கல்லீரலில்தான் பல முக்கியமான உயிர்வேதியல் மாற்றங்கள் நடைபெறுகின்றன. பல புரதங்கள் அங்குத் தயாராகின்றன. உடலுக்குத் தேவையற்ற பொருட்களையும், உபயோகமான சுரப்பிகளையும் வெளியேற்ற இது வழிசெய்கின்றது; சிவப்பணுக்களின் வாழ்வு முடியும்போது உண்டாகும் 'பிலுருபின்' என்ற பொருளைப் பித்த நீருடன் கலந்து வெளியேற்றுகிறது.

கல்லீரல் கெட்டுவிட்டால்

இன்னின்ன விளைவுகள் ஏற்படும் என்ற எச்சரிக்கையையும் காண்கிறோம். அதாவது:

1. இரத்தத்திலுள்ள புரதம் (ஆம்புமின்) குறையும்.

2. இரத்தத்தில் பிலுருபின் அதிகரிக்கும்.

3. கொழுப்பு செரிப்பதில் கோளாறு ஏற்படும்.

4. மஞ்சக்காமாலை நோய் வரும்.

உயிர்வேதியல் பரிசோதனையின் மூலம் கல்லீரல் நோயையும், காமாலையையும் கண்டறியலாம்.

மஞ்சள் காமாலை நோய் பலரை மரண வாயிலுக்கே கொண்டு போகின்றது. இந்தப் பயங்கர நோயின் காரணங்கள் என்ன?

1. அதிக சிவப்பணு அழிவது.

2. கல்லீரல் கெடல்.

3. பித்த நீர்க்குழாய் அடைபடுதல்.

மேற்கண்ட அடிப்படையில் காமாலையை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். உயிர் வேதியல் சோதனையின் மூலம் அது எந்த வகையைச் சார்ந்தது என்று கண்டறிந்து, அதற்கேற்ற வகையில் சிகிச்சையும் பெறலாம்.

உங்கள் இரத்தம் எந்தப் பிரிவைச் சேர்ந்தது?

இதை ஒருசில நிமிடங்களில் நாம் தெரிந்து கொள்ளலாம். நம் கைவிரலிலிருந்து ஒரு துளி இரத்தத்தை எடுத்து, பரிசோதித்து அது எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்பதை உடனே எழுதித் தருகின்றார்கள். வெளியில் இந்தச் சோதனைக்கு 15 ரூபாய் ஆகும்; ஆனால், இங்கோ அது இலவசம்!

நம் கண்கள் படங்களையும் குறிப்புகளையும் பார்த்துக் கொண்டே இருக்கின்றன. இடையிடையே உயிர்வேதியல் துறை மாணவர்களின் விளக்கங்களையும் நம் காதுகள் கேட்கின்றன; கால்கள் அடுத்தப் பிரிவுக்கு மெல்ல நகர்கின்றன.

சிறுநீரக நோய்பற்றி விளக்குகிறது இப்பிரிவு.

சிறுநீரக நோயால் இரத்தமும் சிறுநீரும் மாறுபடும். சிறுநீரில் புரதத்தை அளக்கும் சிறிய சோதனையின் மூலம் 90 சதவிகிதம் நோயைக் கண்டறியலாம். சிறுநீரில் காணப்படும் படிகங்களைக் கொண்டே அதனைச் சார்ந்த உள்நோயைக் கண்டறியலாம். இந்நோயைப் பற்றி ஹிப்போக்ரைட்ஸ் காலம் முதல் தெரிந்திருந்தாலும் இப்படிகங்களின் தோற்றம் பற்றிய உண்மை 1970-ஆம் ஆண்டில்தான் தெரிய வந்தது. இந்நோயாளிகளின் இரத்தத்தையும், சிறுநீரகக் கற்களையும் அரசு சிறுநீரகப் பிரிவுடன் சேர்த்து சோதனை செய்ததில், இந்நோயாளிகள் வைட்டமின் பி-6 இல்லாமல் இருந்தனர் எனத் தெரியவந்துள்ளது. இதுவும் சிறுநீரகக் கற்கள் தோன்ற ஒரு காரணமாகும்.

கிருமிகள் உடலைத்தாக்கி நோயை உண்டாக்க முனையும் போது வெள்ளணுக்கள் தம்முடைய எதிர்ப்புச் சக்தியினால் அவைகளை எதிர்த்து அழிக்கின்றன. அதே நேரத்தில் உடலில் உண்டாகும் ஒருவித சிறப்புப் புரதங்கள் இவ்வகையான கிருமிகளுடன் சேர்ந்து அவைகளைச் சக்தியிழக்கச் செய்கின்றன என்பதை ஆறுவது பிரிவில் பார்க்கிறோம்.

மாற்றும் முறை கையாளும் போது சிலவித குணங்களைக் கவனிக்க வேண்டியது அவசியம். உதாரணமாக இரத்தம் செலுத்தும் போதும், கொடுக்கப் போவோரின் இரத்தமும் ஏற்போரின் இரத்தமும் ஒத்த தன்மையாக இருக்க வேண்டும். இதனை இரத்த அணி, ஆர். எச். குணம் இவைகளின் மூலம் நிர்ணயிக்கலாம். இவைகள் மாறுபட்டால் இரத்த மாற்றம் உயிரிழப்பிற்கே வழி செய்துவிடும்—என்பதை எடுத்துக்காட்டுகிறது ஏழாவது பிரிவு. உயிரணு, ஜீன், மூலக்கூறு உயிரியல் முதலானவற்றை எட்டாவது பிரிவில் நாம் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம்.

இக்கண்காட்சியில் பலவகை விந்தைக் கருவிகளும் வைக்கப் பட்டுள்ளன. இரத்தத்தில் எவ்வளவு சர்க்கரை உள்ளது என்பதைத் துல்லியமாக அறிந்திட ஒரு கருவி இங்கே இயக்கிக் காட்டப்படுகின்றது. ஈரல் நோய் சம்பந்தமான நோயைக் கண்டறியவும், இரத்த ஓட்டம், இதயம் முதலானவற்றின் இயக்கம் பற்றி அறியவும், அடிப்படை வளர்சிதை மாற்றம் பற்றி அறிந்திடவும் பல்வேறு வகையான கருவிகள் காட்சியில் நம்மை விந்தைக்குள்ளாக்குகின்றன. இரத்தம் எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்பதைக் கண்டறிய ஒரு பரிசோதனைக்கூடமும் இங்கு சுறுசுறுப்பாக இயங்கி வந்தது.

உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்கும்போது காளான் பூத்துவிடுகின்றது. இந்தக் காளான்கள் நஞ்சுப் பொருட்களை உண்டாக்கி உணவு பொருள்களோடு சேர்த்து விடுகின்றன. இந்த நஞ்சுப் பொருள்கள் மனித இனத்திற்குப் பல்வேறு தொல்லைகளைக் கொடுக்கின்றன. இவைகளைப் பற்றியெல்லாம் உயிர்வேதியல் துறை வெகு விரிவாக ஆராய்ந்து வருகின்றது.



சிறுநீர், இரத்தம் பரிசோதிக்கும் நவீன கருவி.

1971-ஆம் ஆண்டிலும் இதே போன்ற கண்காட்சி ஒன்று சென்னையில் நடந்தது.


சென்னைப் பல்கலைக்கழக உயிர் வேதியல் துறை மாணவ, மாணவியர் திறனை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ள இந்த அரிய அறிவியல் கண்காட்சியைப் பாராட்டாதார் எவருமிலர்.

சென்னை தவிர தில்லி, பம்பாய், கேரளா, பெங்களூர் ஆகிய பல்கலைக் கழகங்களிலும் எம்.எஸ்சி., உயிர்வேதியல் கற்பிக்கப்படுகின்றது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

'உன்னையே நீ அறிவாய்!' என்றான் அறிவுலக மேதை சாக்ரடீஸ், இளைஞர்களைப் பார்த்து. இந்த வாசகம் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் பொருந்தும். ஆம். உன்னையே நீ அறிந்திட—உணர்ந்திட உதவிய ஓர் ஒப்பற்ற கண்காட்சிதான் இந்த உயிர் வேதியல் கண்காட்சி என்றால் அது மிகையல்ல!

—பி. வி. கிரி

அடிப்படை வளர்சிதை மாற்றத்தை அளக்கும் கருவி.



# மாணவர் அரங்கம்

## பொன்னுக்கு மெருகு தருவோம்!



அரசுப் பணியாளர் தேர்வின்போதோ அல்லது புதிதாக ஏதாவதொரு நிறுவனத்தில் வேலைக்குச் சேருவதற்கு முன்போ பொதுவாக உங்களிடம் கேட்கப்படும் கேள்விகள் பொது அறிவைப் பற்றியதாகவே இருக்கும்.

மாணவ மணிகள் பள்ளிப் படிப்போடு, பொது அறிவுத் தகவல்களையும் தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுதல் வேண்டும். அப்போதுதான் பொது அறிவுச் சோதனையின்போது நாம் சாதனை புரிந்திட முடியும்.

பொன்னுக்கு மெருகு தருவது போன்றது தான், பள்ளிப் படிப்போடு பொது அறிவுத் தகவல்களையும் தெரிந்து கொள்வது.

அன்றாடம் நீங்கள் பத்திரிகைப் படிக்கின்றீர்கள்; பலர் சொல்லப் பல செய்திகளையும் கேட்டிருக்கிறீர்கள். அப்படியானால், கீழே காணும் வினாக்களுக்கு உங்களால் விடை கூற முடிகிறதா பாருங்கள். அப்படி எல்லாவற்றுக்கும் விடை கூறி விட்டீர்களானால், உங்களுக்கு 'அபார நினைவாற்றல்' இருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.



## வினாக்கள்

1. ஐ. நா. சபையில் கடைசியாகச் சேர்ந்த நாடு எது? அது எத்தனையாவது நாடு?

2. இந்தியாவின் 22வது மாநிலம் எது?

3. இதுவரை 'பாரத ரத்ன' விருது பெற்றவர்கள் எத்தனை பேர்? அண்மையில் இவ்விருது யாருக்குக் கிடைத்தது?

4. பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்பும் தற்போதைய செய்தி நிறுவனத்தின் பெயர் என்ன?

5. சென்னையில் 'ஓலைச்சுவடிகள்' உள்ள நூலகம் எங்கே இருக்கின்றது?

6. இந்தியாவின் முதல் ஜனதிபதி, முதல் வைஸ்ராய் யார்?

7. இந்தியாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, முதன் முதலில் எப்போது தொடங்கப்பட்டது?

8. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் எப்போது தொடங்கியது?

9. 'சத்தியமூர்த்தி சாகர்' என்று எதற்குப் பெயர்?

10. இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தைப் பிரதமர் அவர்கள் எப்போது அறிவித்தார்கள்?

11. சாந்தி நிகேதனிலுள்ள விஸ்வபாரதி பல்கலைக் கழகத்தின் மிக உயர்ந்த விருது எது? இவ்விருது அன்னை தெரசாவுக்கும் அண்மையில் வழங்கப்பட்டது.

12. இந்தியாவில் மொத்தம் எத்தனை கிராமங்கள் உள்ளன?

விடை 47 ஆம் பக்கம் பார்க்க.

உமா _ ...

# பெரும் பரிசு பெறவும்

## லட்சம் ரூபாய் உங்களுக்கே கிடைக்கலாம்

குறைந்தபட்சம் 200 ரூபாயுடன் தபாலாபீஸ் சேமிப்பு பாங்க் கணக்கு ஒன்றை 1976 ஏப்ரல் 10ந் தேதிக்குள் துவக்கவும். நீங்கள் பரிசுக்காக காத்திருக்கும்போது கணக்கிலுள்ள தொகைக்கு வருமான வரி விலக்குடன் 5 சதவிகித வருட வட்டியும் கிடைத்து வருகிறது. இக்கணக்கில் பணம் போடலாம், எடுக்கவும் செய்யலாம். ஆனால், 1976 செப்டம்பர் 30ந் தேதி வரை இருப்பில் 200 ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். அப்படிச் செய்தால் 1977 ஜனவரி குலுக்கலில் நீங்களும் சேரலாம். தபாலாபீஸுக்கு ஒரு கணக்கு வீதம் வெவ்வேறு தபாலாபீஸ்களிலும் பல கணக்குகள் வைத்திருக்கலாம். மைனர் குழந்தைகள் உட்பட குடும்பத்திலுள்ள ஒவ்வொருவர் பெயரிலும் கணக்குகள் இருக்கலாம்.

**11,116 பரிசுகள் மதிப்பு ரூ. 20.25 லட்சம்**

ஆண்டிற்கு இரண்டு குலுக்க்ல்கள்

### பரிசுகள்

**ஒரு முதல் பரிசு ரூ. 1,00,000**

**ஐந்து 2வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000**

**பத்து 3வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 20,000**

**நூறு 4வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5,000**

**ஆயிரம் 5வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 500**

**பத்தாயிரம் 6வது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50**

முக்கியம்

**1977 ஜனவரி குலுக்கலில் பரிசு கிடைக்கவில்லையென்றாலும் உங்கள் கணக்கில் எப்போதும் 200 ரூபாயோ அதற்கு கூடுதலாகவோ இருப்பு இருந்தால் அடுத்து வரும் குலுக்கல்களில் பரிசு பெறும் வாய்ப்பு உங்களுக்குண்டு.**

**முந்துங்கள்! இன்றே கணக்கைத் துவக்கவும்.**

**தேசிய சேமிப்பு நிறுவனம்**

த. பெ. எண். 96, நாக்பூர்.

davp 75/590

# உலகம் அழைக்குது ஓடிவா!



கவிஞர் எஸ். டி. சுந்தரம்

எழுந்து விரைவில் வெளியில்வா
ஏழிசைக் கடலில் குளிக்கலாம்!
விழுந்து கிடந்தது போதாதா?
உலகம் அழைக்குது ஓடிவா!

வேலைசெய் யாமல் தூங்கவோ
விடுதலைச் செல்வம் வாங்கினோம்?
ஆலையின் சங்குகள் ஏங்கவோ
ஆயிரம் தொழில்கள் துவங்கினோம்?


சோலையில் குயில்கள் தூங்கினால்
சுகசங் கீதம் கேட்குமா?
காலையில் சூரியன் தூங்கினால்
காரியம் உலகில் நடக்குமா?

பூவும் செடிகொடி வயல்களும்
புதுப்புது நாட்டியம் ஆடுகையில்
மாவலி மனிதன் சக்திகளை
மறந்து தூங்குதல் முறையாமோ?


கடலும் காற்றும் தூங்கினால்
ககனம் கர்ஜனை செய்யுமா?
சுடரும் மனிதன் தூங்கினால்
சோறும் துணியும் கிடைக்குமா?

எல்லாத் தொல்லையும் நீங்கவே
இருபது அம்ச வேலையால்
வல்லமை பெருகுது தோழனே
வளமுடன் தேசமும் வாழவே!

சேவல் கோழிகள் கூவியபிறகும்
செயலின்றி இருப்பது நியாயமா?
சிவந்த வானம் வெளுத்தபிறகும்
சோம்பி இருப்பதும் நீதியா?



[நன்றி: சென்னை வானொலி நிலையம்]



# தமிழ்நாட்டின் மீன்வள மேம்பாட்டுக்கு மத்திய அரசுத்திட்டங்கள்

இந்திய அரசாங்கம் துவக்கியுள்ள மத்திய அரசுத் திட்டங்களும், மத்திய அரசு உதவி பெறும் திட்டங்களும் தமிழ்நாட்டின் மீன் வளத் துறையில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில், நாட்டின் மிகப் பெரிய மீன்பிடி துறைமுகத்தைக் கட்டுதல், மாநில மீன்வளத் துறைக் கார்ப்பொரேஷனுக்கு உதவுதல் போன்ற பெரும் திட்டங்கள் மட்டுமல்லாமல், உள்ளமைப்பை அபிவிருத்தி செய்தல், பயிற்சி வசதிகளை விரிவாக்குதல் உட்பட மீனவர்களுக்கு உதவுதல் ஆகியவையும் இத்திட்டங்களில் அடங்கும்.

இத்திட்டங்களின்படி, தூத்துக்குடியில் ஒரு நடுத்தர மீன்பிடி துறைமுகம் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதற்காக, மத்திய அரசாங்கம் இரண்டு கோடியே எட்டு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கியுள்ளது

சுமார் 6 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், முழுவதும் மத்திய அரசாங்கத்தின் நிதியுதவி கொண்ட ஓர் ஆழ்கடல் மீன்பிடி துறைமுகம் சென்னையில் இப்போது கட்டப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இது முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோடிக்கரை, மல்லிப்பட்டணம் ஆகிய இடங்களில் மொத்தம் 25 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு மீன்பிடி துறைமுகங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியிலுள்ள மீன்பிடி கிராமங்களில், இயக்க உள்ளமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இரண்டு இடங்கள் ஏற்கெனவே குறிக்கப்பட்டுள்ளன.

மாநில மீன்வளத்துறைக் கார்ப்பொரேஷனுக்கு நிதியுதவி அளிக்கும் ஒரு திட்டமும் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. இத்துடன் இக்கார்ப்பொரேஷன் உபயோகப்படுத்துவதற்காக, மெக்ஸிகோவிலிருந்து வரும் பெரிய, மீன் பிடி கப்பல்களின் இறக்குமதியையும் மத்திய அரசாங்கம் ஒருங்கிணைத்து வருகிறது.

மீன் வளத்துறைக்கு விரிவான பயிற்சி, கருவி, விளம்பரச் சாதனங்கள் ஆகியவற்றை இந்திய அரசாங்கம் அளித்து வருகிறது. மீன்வளர்ப்பு மேம்பாட்டுக்கான இத்திட்டத்தை, தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் மீன் பண்ணை அபிவிருத்தி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான ஆரம்பச் செலவைச் சமாளிப்பதற்கு மானியம் மற்றும் கடன் மூலமான உதவிக்கு மற்றொரு மத்திய அரசுத் திட்டம் வகை செய்கிறது.

இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், தமிழ்நாட்டில் ஏராளமான ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்களைத் துவக்கியுள்ளது. நீர்த்தேக்கங்களில் மீன் வள அபிவிருத்திக்கான திட்டங்கள், கலப்பு மீன் வளர்ப்பு, உப்பு நீர் மீன் வளர்ப்பு, உபயோகமில்லாத மீனின் உபயோகம் ஆகியவை அவற்றில் அடங்கும்.

நாட்டின் மீன்வள அபிவிருத்திக்காக அமைக்கப்பட்ட 12 இடங்களில், இரண்டு இடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன; ஒன்று சென்னையிலும், மற்றொன்று தூத்துக்குடியிலும் இருக்கிறது. இப்பகுதிகளின் மீன்வளத்தைக் கவனிப்பதற்காகவும், இந்நோக்கத்திற்குத் தகுந்த சரியான கப்பல், தளவாடங்களை உருவாக்குவதற்காகவும், பரிசோதனை மீன் பிடிப்பு மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் இந்தத் தளங்கள் ஈடுபட்டுள்ளன.

மத்திய கடல் மீன் ஆராய்ச்சிக் கழகத்தின் ஓர் உப நிலையமும், மத்திய உள்நாட்டு மீன் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒரு பிரிவும் சென்னையில் உள்ளன. கடல் மீன் ஆராய்ச்சி உப நிலையம், மற்றப் பணிகளோடு நத்தை சிப்பி முதலியவை வளர்ப்பு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளது. மத்திய உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சிப் பிரிவு, இறால் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளது. தூத்துக்குடிக்கு அருகில் அமைந்துள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சிக் கழகத்தின் உப நிலையம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. இந்நிலையம், மாலுமிகள், பொறியியல் வல்லுனர்கள், இயந்திர நிபுணர்கள் முதலிய கடல் மீன் வளத் துறைப்பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.

## தமிழ்நாட்டில் நடமாடும் கண்காட்சி

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம். பத்தாண்டுச் சாதனை ஆகியவற்றை தெளிவாக விளக்கக் கூடிய நடமாடும் கண்காட்சியொன்று தமிழ்நாடு முழுவதும் நடத்தப்படவிருக்கிறது. ஏப்ரல் மாதம் 12-ஆம் தேதி வரை இக்கண்காட்சி வடஆர்க்காடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நடைபெறும்.

இக்கண்காட்சியை பொது மக்கள் நாள்தோறும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை பார்க்கலாம். இரவில் விளக்கப் படங்களும் திரையிடப்படும்.

மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் விளம்பரக் காட்சிப் பிரச்சார அலுவலகத்தின் மண்டலக் கண்காட்சி நிலையம் இக்கண்காட்சியை நடத்துகிறது.

மகளிர் அரங்கம்

# சர்வதேச மகளிர் ஆண்டுச் சாதனை

—திருமதி சரோஜினி வரதப்பன்
(தலைவர்: மத்திய சமூக நலக் குழு)

இந்தியாவில் சர்வதேச மகளிர் ஆண்டுக் கொண்டாட்டம், புது டில்லியில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, சர்வதேச மகளிர் ஆண்டுக்கான தேசிய முழுக் கூட்டத்தில் சமீபத்தில் நிகழ்த்திய உரையுடன் அதிகாரப்பூர்வமாக முடிவடைந்தது. இப்படி ஓர் ஆண்டின் முடிவைக் குறிப்பிடும் வகையில் நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி தேசத்தின் மேம்பாட்டு வேலைகளில் பெண்களை ஈடுபட்டு உழைக்கும்படிச் செய்வதிலும் அது விஷயத்தில் கவனம் ஈர்க்கப்படும்படிச் செய்வதிலும் ஒரு பத்தாண்டுக் கால முயற்சிக்கு வழி திறந்து விட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

பெண்களின் மதிப்பை ஒரே நாளில் திடீரென முழு மாறுதலும் நடந்து விடமுடியாது என்பதும், பெண்குலம் விடுக்கும் அழைப்பை ஏற்றுச் சமூகத்தில் ஒரேயடியாக மாறுதல் ஏற்பட்டு விடமுடியாது என்பதும் உண்மைதான். ஆயினும் இந்தியாவில் மட்டும் இன்றி உலகம் முழுவதிலும் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் ஆண்டானது நமது பிரதமர் கூறியது போல், பெண்களும் மனித குலத்தின் உள்ளடங்கிய பகுதியே என்பதிலும், பெண்களும், ஆண்களும் சேர்ந்தது தான் மக்கள் குலம் என்பதிலும் உலகக்கவனம் ஆழ்ந்து பதியும்படியாவது செய்திருக்கிறது. எந்த ஒரு சமூகத்திலும் அமைதியில்லையானால், முன்னேற்றம் இல்லை. அதோடு சமத்துவம் இல்லாவிட்டால் அமைதியும் கிடையாது.

எனவே, பெண்கள் தங்கள் பங்கைச் சரிவர ஏற்று நடத்த வேண்டுமானால் அவர்களுக்குச் சமத்துவம் இன்றியமையாதது என்பது இதன் உட்கருத்து. சர்வதேச மகளிர் ஆண்டில் இந்தியாவின் சாதனை என்ன என்பதையும் எதிர்காலத்துக்கான திட்டங்கள் என்ன என்பதையும், ஐக்கிய நாடுகள் நிறுவனம் அரசாங்க நிறுவனங்களுக்கும், அரசுச் சார்பற்ற நிறுவனங்களுக்கும், மொத்தத்தில் சர்வதேச சமூகம் முழுவதற்கும் வேண்டுகோள் விடுத்துப் பெண்களின் உரிமைகளை உத்திரவாத ரீதியில் செயல்முறையில் அவர்களுக்கு அளிக்கவும் அவர்களின் நிலைமையில் மேன்மையை ஏற்படுத்தவும் வழி செய்வதற்காக, வேற்றுமை காட்டுகிற சட்ட திட்ட ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளும்படிக் கேட்டுக் கொண்டிருந்ததைக் கவனத்தில் வைத்துப் பரிசீலிக்க வேண்டும்.

## உலக ரீதியில் செயல் திட்டம்

மேலும் இவைகளை 1975-ல் மெக்சிகோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உலக மாநாட்டில் செய்யப்பட்ட உலகச் செயல் திட்டத்தின் அடிப்படையிலும் கவனிக்க வேண்டும்; அம்மாநாடு ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே சமத்துவம் நிலவும்படி செய்வதற்கான சட்ட திட்டங்களை இயற்றும்படி அரசாங்கங்களைக் கேட்டுக் கொண்டது. பெண்களின் அந்தஸ்து சம்பந்தமாய் உள்ள தங்கள் சட்டங்களை, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் நியாயமான கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அத்திட்டம் கூறுகிறது.

பெண்களின் பிரச்சினைகள் என்னென்ன என்பதைக் கண்டறியவும், எதிர்காலத்தில் இதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று யோசனை கூறவும் இந்தியப் பெண்களுக்கு மத்திய மட்டத்திலும் மாநில மட்டத்திலும் உள்ள மூன்று முக்கியமான நிறுவனங்கள் உதவி புரிந்து இருக்கின்றன. நமது பிரதமரே தலைவராக அமைந்துள்ள சர்வதேச மகளிர் ஆண்டுக்கான தேசியக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. மாநிலங்களிலும் இதே போன்ற குழுக்கள் நிறுவப்பட்டன. இக்குழுக்கள் இந்தியாவில் சர்வதேச மகளிர் ஆண்டுக்கான அலுவல்களை அரசுத் தரப்பில் கவனித்து வந்தன.

அரசாங்கச் சார்பற்ற நிறுவனத்தில், சுயேச்சையான பெண்கள் சேவை நிறுவனங்கள் 41-ம் சேர்ந்து சர்வதேச மகளிர் ஆண்டுக்கான இந்தியக் குழுவாக அமைந்தது. இது, பொதுவான ஒரு திட்டத்தின்கீழ் நாடெங்கிலும் பணியாற்றியது.

இக்குழு, கட்டம் கட்டமாக நிறைவேற்றுகிற பன்னிரண்டு மாதகால நடவடிக்கைத் திட்டம் ஒன்றினுக்கு ஏற்பாடு செய்தது. அப்போது பெண்களைப் பாதிக்கும் அடிப்படை விஷயங்களில் கவனம் திரும்பும்படி செய்யப்பட்டது. அப்படிக் கவனம் பதியும்படி செய்யப்பட்ட முக்கியமான விஷயங்கள் வருமாறு:

பெண்களைப் பாதிக்கும் சமூகச் சட்டங்கள், வேலை செய்யும் பெண்களின் பிரச்சினைகள், கிராமங்களில் பணிபுரியும் பெண்கள்.

இந்த விஷயங்களில் ஒரு திரண்ட அபிப்பிராயம் உருவாகுமாறு செய்வதற்கு இரண்டு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் உள்ள படித்த பெண்கள் இந்த வருடத்திய கோட்பாட்டுப் பொருள் பற்றி எழுதும் கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொள்ளும்படி அரசாங்கத்தால் அழைக்கப்பட்டார்கள். முறைப்படி பார்த்

தால் எழுத்தறிவு இல்லாதவர்கள் என்று சொல்லும்படியாகவும், ஆனால் உண்மையில் விஷயங்களைத் தெளிவாக எடுத்துப் பேசக் கூடிய ஆற்றல் உள்ளவர்கள் ஆகவும் இருக்கும் கிராமப் பெண்கள், கருத்தரங்குகள், உரைக் கோவைகள் என்று நடத்தப்பட்ட கூட்டங்களில் கலந்து தங்கள் கருத்துரைகளைக் கூறும் வாய்ப்புப் பெற்றார்கள்.

மத்திய சமூகநல வாரியம் நாட்டின் தொலை தூரப் பகுதிகளில் உள்ள கிராமங்களிலும் பணிபுரிந்து வருவதால், அந்த வாரியம் கருத்தரங்குகள், உரைக் கோவைகள் என்ற வகைகளில் எத்தனையோ இடங்களில் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, கிராமப் பெண்கள் அங்கே ஒருங்கு திரண்டு வரும்படி செய்து, சர்வதேச மகளிர் ஆண்டானது அவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளைப் பொறுத்த மட்டில் எப்படிச் செயல்பட்டு வருகிறது என்று தங்கள் தங்கள் கருத்துக்களைக் கலந்து பேசி வெளியிடும் படிச் செய்யப்பட்டது. மேலும் அது பல்வேறு மாநிலங்களில் பெண்களுக்கான சங்கங்களையும் தலைமைப் பெயர்ச்சி முகாம்களை நடத்துவதில் வேறுபல நிறுவனங்களுடனும் கூட்டுச் சேர்ந்து பாடுபட்டது.

சாதாரணமாக, கருத்தரங்குகள், உரைக்கோவைகள் என்றால் வெறும் பேச்சு மேடைகள் என்று பட்டம் கட்டப்படுகின்றன. ஆனால், இக் கூட்டங்களில் கிராமங்களையும் பின்னடைந்த பகுதிகளையும் சேர்ந்த பெண்கள், எத்தனையோ விதவிதமான விஷயங்கள் பற்றி மனம் திறந்து கருத்துத் தெளிவுடன் உள்ளார்ந்த நம்பிக்கையுடன் பேச முன் வருகிறார்கள் என்பது ஒரே வியப்பை ஊட்டுவதாக இருக்கிறது. சில இடங்களில் அவர்கள் செய்த பரிந்துரைகள் நன்கு கற்றறிந்த பெண்களையே திகைக்க வைக்கும் வகையில் பிரச்சினைகளை அவர்கள் வெகு தெளிவாக உணர்ந்திருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டின.

## ஒருமித்த முயற்சி

இந்தக் கருத்தரங்குகளில் அவர்கள் செய்த பரிந்துரைகள் சமூகநலக் கொள்கைகள் முதல், அடிப்படை சௌகரிய வசதிகளை ஏற்படுத்தித் தரும் முறை வரையில் எத்தனை எத்தனையோ விஷயங்கள் குறித்தவையாக இருந்தன. இந்தப் பரிந்துரைகளின்படி மாதர்கள், குழந்தைகள் சம்பந்தமாய் நடத்தப்படுகிற



எல்லாத் திட்டங்களும் ஒரே துறையின் கீழ்க் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அந்தத் துறைகளின் அலுவல்களில் பெண்களும் பங்கு கொள்ளும்படிச் செய்ய வேண்டும் என்றும் மத்திய, மாநில அரசுகள் வற்புறுத்தப்பட்டுள்ளன. ஊராட்சி நிறுவனங்கள் தங்கள் பொது வருமானத்திலிருந்து மாதர்கள், குழந்தைகள் சம்பந்தமான திட்டங்களுக்குக் கட்டாயமாய் நிதி ஒதுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் படியும் நகர்ப்புறச் சொத்து உச்சவரம்புச் சட்டத்தின்படியும் அரசு கைவசப்படுத்தியிருக்கிற உபரியான விவசாய நிலங்களையும் வீட்டுமனை நிலங்களையும் சுயேச்சையான கல்வி நிறுவனங்களுக்கும் சேம நல நிறுவனங்களுக்கும் கிடைக்கும்படி அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பெண்களுக்கு நிலங்கள் மீது சொத்துடைமை உரிமை இருக்க வேண்டும் என்றும், குடும்பச் சொத்தில் பங்கு இருக்க வேண்டும் என்றும் பெண்கள் கோரியிருக்கிறார்கள்.

பெண்கள் சம்பந்தமான சட்ட திட்டங்களைப் பொறுத்தமட்டில் சர்வ தேச மகளிர் ஆண்டில் அரசுப் பிரகடனம் செய்த ஒரே விதமான வேலைக்கு ஒரேவிதமான சம்பளம் என்கிற அவசரச் சட்டமானது எல்லோராலும் பாராட்டி வரவேற்கப்பட்டிருக்கையில் ஏராளமான பெண்களை வேலைக்கு வைத்திருக்கும் தொழிற்சாலைகளிலே தொழிலாளர் நலச் சட்டங்களுக்கு உட்பட்டிராதவையாக உள்ள விஷயங்களும் அச் சட்டங்களை வளர்ச்சியுறச் செய்ய கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் கூக்குரல் கிளம்பியிருக்கிறது.

மாமூல் சட்டங்கள், சொந்தச் சட்டங்கள் முக்கியமாக திருமணம், விவாகரத்து முதலியவை பற்றிய சட்டங்களைத் திருத்த வேண்டும் என்றும், இந்தியாவில் உள்ள எல்லாப் பெண்களுக்கும் ஒரேவிதமான சட்டம் இருக்கும்படிச்செய்ய வேண்டும் என்றும் பெண்களிடையே பொதுவான கோரிக்கை கிளம்பி இருக்கிறது. அவைகளில் சில சட்டங்கள், சில வகுப்புக்களில் பெண்களைக் கீழ் மட்ட நிலையில் ஆழ்த்தி வைத்திருக்கின்றன.

பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இருப்பது பெண்களின் மதிப்புக்கு நெருங்கிய தொடர்புள்ளதாக இருப்பதால், பெண்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்றும், பகுதி நேர வேலை வாய்ப்புக்கள் வேண்டும் என்றும், வீட்டுவேலை செய்வதில் உள்ள சிரமங்களைக் குறைக்கக் கூடிய நவீன உபகரணங்கள் நியாயமான விலைகளில் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்றும், குடிசைத் தொழில்களில், சுயமாகச் செய்யும் வேலைகளை மேற்கொள்ள வாய்ப்புக்கள் வேண்டும் என்றும் கோரிக்கை இருந்து வருகிறது.

## பெண்களுக்கான தொழில்பேட்டைகள்

இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மத்திய சமூக நல வாரியம் சர்வதேச மகளிர் ஆண்டில் எத்தனையோ திட்டங்களை ஆரம்பித்து வைத்திருக்கிறது. கேரளத்தில் எர்ணாகுளத்தில் முழுக்க முழுக்கப் பெண்களையே வேலையில் ஈடுபடுத்தும் தனிப்பட்ட ஒரு தொழில்பேட்டை நடத்துவதற்காக ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்பேட்டையில் துத்தநாகத்தைக் கொண்டு மின் முலாம் பூசும் தொழில்களும், ஜெம் கிளிப், கம்பிகள், குண்டூசிகள் முதலிய சில்லறைச் சாதனங்களைத் தயாரிக்கும் தொழில்களும் இருக்கும். 10 இலட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்திலும் தனியார் வரையறையில் உள்ள நிறுவனமாகத் துவங்கப்பட்ட அந்நிறுவனத்திற்கான மூலதனத்தைப் பெண்களே திரட்டி வருகிறார்கள்.

இதேபோன்ற தொழில் பேட்டைகள் ஆந்திர மாநிலத்தி

லும் பிற மாநிலங்களிலும் ஏற்பட்டு வருகின்றன. ஆந்திர மாநிலத்திலும் மகாராஷ்டிரத்திலும் பெண்களே தொடங்கி நடத்துகிற தொழில்களுக்கு நிதி வசதி தேடித் தருவதற்காக தொழில் நிதி நிறுவனங்களைப் பெண்களே ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இத்தகைய தொழில் பேட்டைகள் எங்கெங்கு தொடங்கப்பட்டுள்ளனவோ அங்கெல்லாம் அந்தந்த மாநில அரசுகள் அவைகளுக்கு இலவசமாக இட வசதியையும், பிற எல்லா வசதிகளையும் செய்துதர முன்வந்திருக்கின்றன. மேலும், மத்திய சமூக நல வாரியம் தற்போது அமல் நடத்திவரும் திட்டங்கள் மூலம் பல தரப்படுத்தப்பட்ட பெண்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைத்து வருகின்றன.

இந்த வாரியம் நடத்தி வரும் தொழில் பயிற்சித் திட்டங்களும் சமூக பொருளாதாரத் திட்டங்களும், இப்போது ஏராளமாக பெண்கள் பின்கண்ட பலவிதமான தொழில்களில் ஈடுபடுவதற்கு வகை செய்துள்ளன. அத்தொழில்கள் . ரேடியோ பாகங்களைப் பொருத்தி இணைத்து செட்கள் தயாரிப்பது, டெலிவிஷன் செட் தயாரிப்பது, புகைப்படத் தொழில், மின்முலாம் பூசுவது, உதிரி உறுப்புக்களை இணைத்து முழு இயந்திரங்களை உருவாக்குவது முதலியனவாகும்.

1975-76-ல் மட்டும் சுமார் 60 இலட்சம் ரூபாய் செலவில் 251 தொழில் பயிற்சித் திட்டங்களுக்கு மத்திய சமூக நல வாரியம் அனுமதி அளித்திருக்கிறது. இதன் மூலம் 5,000-க்கும் அதிகமான பெண்களுக்கு நன்மை ஏற்படும். 106 சமூகப் பொருளாதாரத் திட்டங்களும் தனியாக 60 லட்சம் ரூபாய் செலவில் துவங்கப்பட்டு, குறைந்த வருமானமுள்ள தரப்பைச் சேர்ந்த 3,000 பெண்களுக்கு, வேலை கொடுப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களில், ஆடைகள், தயாரிக்கும் தொழில்கள், அச்சகங்கள், கைத்தறி, கைவேலைத் தொழில்கள், பிற சிறு தரப்புத் தொழில்கள் ஆகியவை இருக்கும்.

ஏராளமான பெண்கள் முழு நேரப்பணிகளைச் செய்ய இப்போது முன் வந்திருப்பதால் அவர்கள் தங்கி வசிப்பதற்கு விடுதிகளையும், வேலை நேரங்களில் அவர்களின் குழந்தைகளை வைத்துப் பாதுகாப்பதற்கான சிறுவர் விடுதிகளையும் கட்டுவதற்கு இந்திய அரசினர் முன்பைவிட அதிக அளவுக்கு நிதி ஒதுக்கி இருக்கிறார்கள்.

பொன்னுக்கு மெருகு தருவோம் !

## விடைகள் ....

1. சூரிநாம்—144-வது நாடு.
2. சிக்கிம்.
3. 17 பேர்—தலைவர் கே. காமராஜர் அவர்களுக்கு
4. 'சமாச்சார்'
5. சென்னைப் பல்கலைக்கழகத்திலுள்ள ஒரு கட்டடத்தில் உள்ளது. இதன் பெயர்: 'கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்' (*Oriental Manuscript Library*).
6. முதல் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத். முதல் வைஸ்ராய் கானிங் பிரபு.
7. 1881-ஆம் ஆண்டு.
8. 1951-ஆம் ஆண்டு.
9. பூண்டி நீர்த்தேக்கத்திற்கு
10. 1975-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள்.
11. 'தேசிகோத்தம' விருது.
12. 5,75,936 கிராமங்கள்.

தொகுப்பு : பி. வி. ஜி.

### தலைசிறந்த சாதனை

சர்வதேச மகளிர் ஆண்டில் செய்யப்பட்டுள்ள தலைசிறந்த சாதனையாக மக்களிடையே மிகப் பெரும் அளவில் ஏற்பட்டுள்ள ஒரு விழிப்புணர்ச்சியைக் கூறலாம்: அதாவது சமூகத்தை உள்ளீடாக அரித்து, வலுக்குறையச் செய்கிற பழக்க வழக்கங்கள், சமூகக் கேடுகள் ஆகியவைகளுக்கு எதிர்ப்பாகத் தோன்றியுள்ள மாபெரும் விழிப்புணர்ச்சியைக் கூறலாம். வரதட்சணைப் பழக்கத்திற்கு எதிராக இடி முழக்கம் போன்ற கண்டனம் கிளம்பியுள்ளது.

பீகார், பஞ்சாப், அரியானா, ஆகிய மாநிலங்கள் வரதட்சணை கொடுக்கல் வாங்கல்களைத் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றமாக் ஆக்கியுள்ளன. அரசாங்க ஊழியர்கள் தங்கள் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் வரதட்சணை கொடுப்பதையோ, வாங்குவதையோ தடைசெய்கிற விதத்தில் அரசாங்க ஊழியர் நடத்தை விதிகளை அரசு திருத்தி இருக்கிறது. இவைகள் மனத்திற்கு மிகவும் தெம்பூட்டுகிற அம்சங்கள் ஆகும். திருமணத்தில் வரதட்சணை இருந்தால் அந்தத் திருமணத்தைச் செய்யமாட்டோம் என்று சூளுரையைச் செய்து இளைஞர்கள், முக்கியமாக பெண்கள், பெருவாரியாக இயக்கம் நடத்தத் தொடங்கி இருப்பதுதான்.

இந்த விழிப்புணர்ச்சி இன்னும் கடுமையாக, இறுகிப்போன பல உள்ளீட்டுப் பகுதிகளுக்கும் பரவி வருகிறது. குடும்பநலத் திட்டங்கள், வெடித்துப் பரவும் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்

## நிதி அமைச்சரின் விஞ்ஞான மனநிலை!

இந்த ஆண்டு மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பட்ஜெட் அறிக்கையோடு முதல் தடவையாக 'ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்திக் கொள்கை' என்ற அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

கிராமப்புறப் பகுதிகளின் வேலை வாய்ப்புக்கும், வளர்ச்சிக்கும் விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவது பற்றிய திரு. சி. சுப்பிரமணியத்தின் தத்துவத்தையும் - திட்டத்தையும் இந்த அறிக்கை விவரிக்கிறது.

விவசாயம், விஞ்ஞானம்–தொழில் நுட்பம் ஆகிய அமைச்சர் துறைகளை வகித்த திரு. சி. சுப்பிரமணியம், விவசாயத்தை நவீனப்படுத்துவதில் மிகவும் ஆர்வம் கொண்டவர். மத்திய உணவு, விவசாயத்துறை அமைச்சராக அவர் பதவி வகித்தபோதுதான் "பசுமைப் புரட்சி" துவக்கப்பட்டது.

பாங்காக்கிலுள்ள ஐ. நா ஆசிய அபிவிருத்திக்கழகம் கூட்டிய நிபுணர்களின் கூட்டத்திலும், அண்மையில் சென்னையில் நடைபெற்ற விஞ்ஞான மாநாட்டிலும் திரு. சி. சுப்பிரமணியம் இந்தப் பொருள் பற்றிய ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

## இந்த ஆண்டில் மின்சார நெருக்கடி இருக்காது!

"மின் துறையில் இவ்வாண்டு நெருக்கடி எதையும் நான் எதிர்பார்க்கவில்லை. எனினும் மாநிலத்தில் பெருகிவரும் தேவைகளைச் சமாளிக்க மின்சார உற்பத்தி சீராகப் பேணிக் காக்கப்பட வேண்டும். இதற்காகக் குறுகியகால, நடுத்தர, நீண்டகால, நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கும். புதிய அனல்மின் நிலையங்களை நிறுவுவதாக இருந்தால் தண்ணீர், நிலக்கரி போன்ற மூலப் பொருட்கள் கிடைக்கும் அடிப்படையில் அமைக்க வேண்டும். மிகப்பெரிய அனல் மின் நிலையங்கள் நிறுவுவதை நான் ஆதரிக்கின்றேன்."

—ஆர். வி. சுப்பிரமணியன்

[16-3-76 அன்று நிருபர்களிடம் ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் கூறியது].

படுத்துவதற்கான ஓர் உத்தியாகவே இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது தொடர்ந்து மீண்டும், மீண்டும் ஏற்படுகின்ற பிரசவங்கள் காரணமாய் நலிவுற்றுவிடுகிற தாய்மார்களின் உடல் நலத்தைப் பாதுகாக்கும் ஏற்பாடு என்ற முறையிலும் புதிய முக்கியத்துவம் பெற்றுவருகிறது.

இனி, மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறும் பெற்றோர் விஷயத்தில் எல்லா விதமான கல்விச் சலுகை வசதிகளையும், சுகாதார, சேவை வசதிகளையும் கிடைக்காமல் செய்துவிட வேண்டும் என்று 2,000 கிராமப் பெண்கள் ஒரு கருத்தரங்கில் கோரியுள்ளனர் என்பது பெண்களிடையே இந்த விழிப்புணர்ச்சி எந்த அளவுக்குப் பரவி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிற ஓர் அறை கூவல் ஆகும்.

தங்கள் வீட்டு ஆண்பிள்ளைகளின் குடிப்பழக்கத்தைத் தடுக்க வேண்டும் என்றும், மது உபயோகத்தைத் தடுக்க வேண்டும் என்றும், பெண்கள் விடுத்துள்ள கோரிக்கைகளுக்கு நல்ல எதிரொலியாக சர்வதேச மகளிர் ஆண்டில் அரசு மதுவிலக்கை அமல் செய்வதற்காகத் தொடங்கப்பட்ட 12-அம்சத் திட்டம் துணிச்சலானதாகும். இத்திட்டம் எத்தனையோ குடும்பங்களுக்கு வெகுநாட்களாய் நீடித்து இருந்து வருகிற ஒரு பெரும் குறையை நீக்கி, மிகவும் தேவையான ஏற்பாட்டை அளிக்கும்.

இறுதியாகக் கூறுவதானால் சர்வதேச மகளிர் ஆண்டு, பெண்களை அவர்கள் ஆழ்ந்து கிடந்த செயல்முடக்க நிலை, அறியாமை ஆகியவைகளிலிருந்து உலுப்பி, எழுப்பி, எதிர்காலம் பற்றிய ஓர் நன்நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அவர்கள் தங்கள் பங்குப் பணியை ஆற்றத் தயாராக நிற்கிறார்கள். இப்படிப் பொங்கி எழுந்துள்ள இந்த ஊக்க உணர்ச்சி வீணாகி விடாமல் இருக்க வேண்டுமானால், அவர்களின் உற்சாகத்தைச் சரியான வழியில் பாய்ந்து பரவுவதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதிர்ஷ்டவசமாக அரசாங்கம் ஏற்கெனவே எதிர்கால அலுவல் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அதைச் செயல்படுத்துவதற்கான ஒரு நிர்வாக அமைப்பு முறையை உருவாக்கியும் வருகிறது.


# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்!
## நியாயமான விலைகள்!



கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,

### அழகு மிளிரும் ஆரணங்குகள்!


ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்

### படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!


நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

### துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



கோ-ஆப்டெக்ஸ்

### லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்


கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

பதிவு எண். M. 8676

# இந்தியப் பிரதமரின்

# 20

## அம்சத் திட்டம்



உழவர் வாழ்வு
உயர்ந்திட...

மாணவர் வருங்காலம்
வளம்பெற...

## வழிகாட்டுகிறது!

இணை நின்று தோள் கொடுப்போம்!
வெற்றிபெற உழைத்திடுவோம்!!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.